# கல்வெட்டு



டாக்டர் உ. வே.
17082

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்

இதழ் 19 ★ காளயுக்தி ஆண்டு, ஐப்பசித் திங்கள் ★ விலை ரூ. 1-5

17081

# கொடையாகக் கொடுத்த கொடை

சு. இராசகோபால் எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்

புதுக்கோட்டைப் பகுதியில் ஒரு கோமான். பெயர் வேதன் திருச்சிற்றம்பல முடையான். இவனைப்பற்றி பாடுவதற்காகச் செங்கற் பட்டுப் பகுதியில் பிறந்த ஒரு புலவர் சென்றூர். இவர் பெயர் குன்றன் திருச்சிற்றம்பலமுடையான். கோமானைப் பாடிப் புலவர் ஒரு நிலப் பரப்பைப் பரிசிலாகப் பெற்றூர். அவர் கவிபாடி பரிசிலாகப் பெற்ற காணியை அப்படியே அவ்வூர் இறைவனுக்குக் கொடுத்து விட்டார். பெயரைப் பார்க்கின்ற போது புலவரும், புரலவனும் சிறந்த சிவபக்தர் களாகவே தெரிகின்றனர். பெயரிலும் ஒரு பொருத்தம், இருவரும் திருச்சிற்றம்பலம் உடையவர்கள்

புதுக்கோட்டை மாவட்டம் மடத்துக் கோவிலில் இச்செய்தியைக் குறிக்கும் கல்வெட்டு உள்ளது. குலோத்துங்க சோழனின் 18-வது ஆண்டுக் (கி.பி. 1145) கல்வெட்டு.* புலவரின் கவியுடன் தொடங்கு கிறது.

" ஸ்வஸ்திஸ்ரீ வானை வயிறு நிறைய மடற் கமுகம்
பாளை பசுந்தேந்நொழுகும் பைய்யூரே
நானை யென்று செப்பாத வாய்மையாந்
வேதந் திரு மனு நுலொப்பா நெங் கோமாற்றநூர்'

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேசரி பந்மரான திரிபுவனச் சக்கர வர்த்திகள் ஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௰௮ ஆவது இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டு வடகோநாட்டு உறத்தூர்க் கூற்றத்து உடையார் திருப் பெருமாளுண்டார்க்கு ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து மருதத்தூர் மருதத்தூருடையாந் குன்றன் திருச்சிற்றம்பல முடையானேந் கன்னி ஞாயற்று ஏழாந்தியதியும் திங்கள்க் கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் இத் திருப்பெருமாளுண்டார் திருக்கை மலரிலேய் நான் நீர் வார்த்த குடிகாடு இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டு வடகோநாட்டு உறத்தூர் கூற்றத்துப் பைய்யூர் பைய்யூருடையான் திருச்சிற்றம் பல முடையான் வேதவன முடையானை நான் கவிபாடி பாடின கவிக்கு எனக்கு பரிசில் **தந்ததந்** காணியான குடிகாடு . . . . . . "

என்று செல்கிறது அக்கல்வெட்டு.

---

* புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் எண் 129

17082

# கல்வெட்டு

டாக்டர் உ. வே.
17082



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்

இதழ் 19 ★ காளயுக்தி ஆண்டு, ஐப்பசித் திங்கள் ★ விலை ரூ. 1-5

முகப்புப் படம்

செவ்வேள், கங்கைகொண்ட சோழபுரம்.

முதலாம் இராசேந்திரன் காலம், கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

# பண்டைக்கால வெள்ளத் தடுப்பு முறைகள்

கே. ஸ்ரீதரன்
அகழ்வாய்வாளர்

இயற்கையின் சக்தி எல்லையற்றது. ஆற்றில் வரும் வெள்ளத்தால் பல நகரங்கள் அழிவுற்றன என்று வரலாறுகள் கூறுகின்றன. இன்றும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கக் காண்கிறோம். வெள்ளத்தால் சிந்துநதிக் கரையில் இருந்த ஹரப்பா, மொஹஞ்சதாரோ நகரங்கள் அழிந்தன என்று அகழ்வாய்வினால் தெரியவந்துள்ளது. இவ்வாறு வெள்ளங்கள் ஏற்பட்டதைப் பற்றியும் அதனைத் தடுக்க எடுக்கப் பெற்ற முயற்சிகளைப்பற்றியும் கல்வெட்டுக்கள் கூறும் சில செய்திகளைக் காண்போம்.

பண்டைச் சோழ மன்னர்களின் உள்நாட்டுத் தலைநகரமாக விளங்கியது உறையூர். உறையூர் அழிந்ததற்குக் காரணம் பல வகையாகக் கூறப்படுகின்றன. ஆனால் உண்மையில் நடந்தது என்ன? உறையூரில் அகழ்வாராய்ச்சி நடந்த பொழுது குழிகளில் ஒரு பாள நிலையில் மணலும் களிமண்ணும் அடுக்கடுக்காக அடுத்தடுத்துக் காணப்பட்டன. அவற்றின் இடையே சிறிதும் பெரிதுமான கருங்கற்கள் புதைந்திருந்தன. ஒரு பெரிய வெள்ளப்பெருக்கினால் இவ்வாறு ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதை அது எடுத்துக் காட்டியது. அகழ்வாராய்ச்சிக் கணிப்புப்படி வெள்ளம் ஏற்பட்ட காலம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டாகும். இதை மெய்ப்பிக்கும் வகையில் உறையூருக்கு அருகில் உள்ள அல்லூர் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒரு செய்தியை நமக்குத் தருகிறது.[1]

> ... ஊரின் வடகிழக்கின் னிலம் அல்லூர் காவிரி பெருகிக் குலை
> உடைத்து மணல்லிட்டுப் புன்செய்யாக கிடக்க
> ஆறேழாட்டைக் கால் பயிர் ஏறாதே பாழ்கிடக்க ...

காவிரி வெள்ளத்தால் அல்லூர் கோயில் நிலங்கள் அழிந்தன என்று கூறுகின்றது. உறையூரிலிருந்து அல்லூர் சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. இவ்வெள்ளம் முதலாம் பராந்தகச் சோழனுடைய 37-ஆவது ஆட்சி ஆண்டில் ஏற்பட்டதாகக் கூறுகிறது. ஆகவே உறையூர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் காவிரியின் வெள்ளத்தால் அழிந்தது என்ற உண்மை விளங்குகிறது.

விக்கிரமச் சோழனது 6-ஆம் ஆட்சி ஆண்டில் வெள்ளம் ஏற்பட்டு ஊர் அழிந்ததாக வட ஆர்க்காட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயில் கல்வெட்டு கூறுகின்றது.[2]

> ... இவ்வூர் யாண்டு 6-வது
> பெருவெள்ளம் கொண்டு ஊரும் போகமும்
> அழிந்து அநர்த்தப்பட்டு இவ்வூரிறை இறுக்கைக்கு
> உடலில்லாமையால் நீர் நிலம் விற்றுக் கொடுத்தோம் ...

பாலாற்றில் வெள்ளம் வந்து வண்டல் படிந்த நிலங்களைச் செப்பனிட 12 கோல் நிலம் கூலியாக அளிக்கப்பட்டதாகத் திருமாற்பேற்றுக் கோயில் கல்வெட்டு கூறுகின்றது.[3]

## வெள்ளத் தடுப்பு முறைகள்

ஆற்றில் வெள்ளம் வரும்பொழுது அதிகமாக வரும் நீரை, ஆற்றின் கரையிலிருந்து சிறு கால்வாய்களின்மூலம் கொண்டு சென்று நிலங்களுக்கு நீர் பாய்ச்சும் முறை இருந்து வந்திருக்கிறது. இந்த அமைப்புக்கு 'வெள்ளக் கால்' என்று பெயர். இந்த அமைப்பின்மூலமாக ஆற்றில் வரும் அதிகப் படியான நீர் சென்றுவிடுவதால் கரை உடையாது. அதிகப்படியான நீரையும் நிலங்களுக்குப் பயன்படுத்தலாம். பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் ஏகதீரமங்கலத்தைச் சார்ந்த அந்தணர்களுக்கு வேகவதியாற்றிலும், பாலாற்றிலும் 'வெள்ளக் கால்களை' அமைத்து அதன்மூலம் நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சும் உரிமை அளித்ததாக ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.

சந்திரமௌளிப் பேராற்றில் வந்த வெள்ளத்தால் தண்ணீர் கோயிலின் அருகில் சாலை வரையில் வந்து பெருக்கெடுத்து ஓடியது. இதைக் கண்ட திருமறைக்காடுடையான் என்பவன் வெள்ளநீரை வடியச் செய்வதற்கும், ஆற்றின் வெள்ளத்தால் ஊருக்கு ஏற்படும் துன்பம் மீண்டும் நடக்காமல் இருப்பதற்கும் ஆற்றின் போக்கையே மாற்றினான். ஆறு முன்பு ஓடிக்கொண்டிருந்த வழியும் அதன் அருகில் இருந்த கோயிலின் சில நிலங்களும், ஊரைச் சுற்றி வரும் இரண்டாவது சாலையாக மாற்றப்பட்டது. அச்சாலை 'திருமறைக்காடுடையன்' என பெயரிட்டு அழைக்கப்பட்டது. அவ்வாறு சாலையாகக் கோயில் நிலங்கள் மாற்றப்பட்டுவிட்டதால் கோயிலுக்கு 2 வேலி நிலம் தானமாக அளித்தான். இவ்வாறு வெள்ளத்தைத் தடுக்க எடுத்த முயற்சியைப்பற்றி ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுடைய 8-ஆம் ஆண்டைய திருக்குவளைத் தியாகராஜசுவாமி கோயில் கல்வெட்டு கூறுகின்றது.[5]

மூன்றாம் இராஜராஜனின் திருமழபாடிக் கல்வெட்டில் தெற்றி பெரியானான எதிரிலிச் சோழ மூவேந்தவேளான் என்பவன் இவ்வூருக்குச் செய்த நன்மைகளைப்பற்றிக் கூறப்படுகின்றது.

> .........சண்பங்குழி தூர்ப்பித்து
> விக்கிரமசோழன் திருவீதியாக செய்விக்கையாலும்
> கொள்ளிடவாறு ஊன. த்துறையில் இது தெற்கே
> பேத்து ஆறாக வெட்டி கரைசெய்து ஊர்க்கு
> ரக்ஷை செய்கையாலும்......

மேற்கண்ட கல்வெட்டு வரிகளால் இவ்வூருக்குக் கொள்ளிட ஆற்றின் வெள்ளத்தால் துன்பம் உண்டாகியிருக்கிறது என்று அறியலாம். கொள்ளிட ஆற்றின் வட கரையில் உள்ளது திருமழபாடி. இவ்வாறு சேதம் உண்டாகாமல் தடுக்க ஆற்றின் தெற்குப் பகுதியில் இருந்த நிலத்தை வெட்டி ஆறாகச் செய்து கரை அமைத்து ஊரைக் காப்பாற்றியிருக்கிறான் என்பதை உணரலாம்.

ஆற்றின் வெள்ளத்தால் ஊருக்குச் சேதம் உண்டாக்காமல் இருக்க ஆற்றின் போக்கையே மாற்றி அமைத்திருக்கிறார்கள் என அறிகிறோம்.[6]

வெள்ளம் ஏற்படுத்தும் அழிவைத் தடுப்பதற்கு எடுத்த வேறு முயற்சிகளைப்பற்றி விஜயநகர மன்னனான சதாசிவராயரின் திருவரங்கக் கோயில் கல்வெட்டு கூறுகிறது. திருவரங்கத்தைக் காவிரி வெள்ளம் அழிப்பதைக் கண்ட ஔக்குநாராயண திருவேங்கடய்யங்கார் என்பவர் திருவரங்கத்தின் மேற்குக் கரைக்கு எந்திரஸ்தாபனம் செய்தும், அய்யனார் உருவச் சிலையை அமைத்தும், காவிரியின் வடகரையில் நாணலை நட்டதாகவும் குறிப்பிடுகிறது.[7]

மேற்கண்ட செய்திகளால் பண்டைக் காலத்தில் பல்வேறு வழிகளில் வெள்ளத்தைத் தடுப்பதற்கு உரிய பணிகளை மேற் கொண்டுள்ளனர் என்பதை அறிகிறோம்.

---

1. South Indian Inscriptions Vol, VIII, No. 689.
2. ,, ,, Vol. VII, No. 96.
3. A. R. E. 322 of 1906.
4. Administration and cultural life under the Pallavas - C. Meenakshi.
5. A.R.E. 1950 - 51/265.
6. இக்கல்வெட்டை நேரில் படித்துக் குறிப்பெடுத்து உதவியவர் திரு. எஸ். ராமச்சந்திரன், எம்.ஏ., காப்பாளர், தரங்கம்பாடி.
7. கல்வெட்டு ஓர் அறிமுகம் — தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு.

---

**இது கோவை மாவட்டம் கோபிச் செட்டிப் பாளையம் வட்டம், கணக்கம் பாளையத்திலுள்ள கல்வெட்டு. சோழ மன்னன் குலோத்துங்கனுடைய 23-ஆவது ஆட்சியாண்டில் நாடாழ்வான் நாட்டு வடகரையில் உள்ள குளமாணிக்கமாந கேசரி நல்லூரில் வாழும் ஏழ்கரைக் கம்மாளரைப் பற்றி குறிக்கிறது.**

## கல்வெட்டு

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கொலோத்துங்க
2 சோழ தேவற்கு யாண்டு இருபத்
3 து மூந்ருவது நாடாழ்வாந் நாட்டு
4 வடகரையில் குளமாணிக்க மாந
5 நுக் கேசரி நல்லூர் ஏழ்க
6 ரை நாட்டுக் கமாளரோ(ம்) செய்த
7 பரிசாரமாவது கமாள(க்)(ர்) எதுக்
8 குடுப்பிக் ... மத்து வாங்கின
9 ...க்கிநே இகாடு வார் தட்டாமல்ல
10 ந் மத்தநார சோழ பெருந்தடாந்
11 இது சிஷிக்க அற மற பெறுக

# வருஷ நாட்டுப் பகுதியில் வரலாற்றுத் தடயங்கள்

மா. சந்திரமூர்த்தி
பதிவு அலுவலர், மதுரை

மதுரை மாவட்டத்தில் நீண்ட மலைத் தொடர்ச்சிக்கு அடுத்து மலை வளம் நிறைந்த பகுதி வருஷ நாடும் அதனைச் சார்ந்த மலைத் தொடரு மாகும். இத்தொடர்ச்சி வருஷ நாட்டிலிருந்து தொடங்கி வடக்கே உள்ள ஆண்டிப்பட்டிவரை பரந்து காணப்படுகிறது. இத் தொடர் இம்மாவட்டத்தின் தென்மேற்கு மூலையிலிருந்து வடகிழக்காக நீண்டு செல்கிறது. இம்மலை மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து விலகிச் செல்கிறது. இவ்வருஷ நாட்டுப் பகுதியில்தான் வைகை நதி உற்பத்தியாகிறது.

## வருஷ நாடு

இம் மலைத்தொடரில் உள்ள வருஷ நாடு என்னும் பழமையான ஊரின் பெயரால்தான் இப்பகுதிக்கு 'வருஷ நாடு' (மழைநாடு) என்ற பெயர் ஏற்பட்ட தாக அறிகிறோம். இவ்வூர் வருஷ நாட்டுப் பள்ளத்தாக்கின் நடுவே வைகை யின் வலது கரையில் அமைந்துள்ளது. இவ்வூர் காடுகள் நிறைந்து பாழடைந்த கிராமமாகக் காணப்படுகிறது.

இவ் வருஷ நாட்டைப் பற்றி டபுள்யு பிரான்சிஸ் என்ற மாவட்ட ஆட்சியாளர் 1906-இல் தாம் வெளியிட்ட மதுரை மாவட்ட விவரத் தொகுப்பு நூலில் கீழ்க்கண்டவாறு குறித்துள்ளார். "1821-ஆம் ஆண்டுவரை இப்பகுதியில் 30 குடும்பங்கள் வாழ்ந்துவந்ததாகவும் ஆனால் தற்போது தரிசு நிலமாகப் பாழ்பட்டு கிடக்கும் இப்பகுதியில் பருவ காலங்களில் மட்டும் காட்டுப் பொருளை விளைவித்து வரும் ஒரு ராவுத்தரும் அவருடைய கூலியாட்களுந் தவிர வேறுயாரும் இல்லை எனவும் குறித்துள்ளார்". மேலும் முன்னர் இப்பகுதி யை ஆண்ட ஜமீன்தார் ஒருவனின் கொடுமைக்குள்ளான மாடு மேய்க்கும் இடை யனின் சாபமே இப்பாழ்நிலைக்குக் காரணமென செவிவழிச் செய்தி கூறுகிறது. தற்போது இங்குள்ள கோயிலும், குளமும், கற்செக்கும், 10 அடி நீளமுள்ள விலங்கு குடி நீர்த்தொட்டியும், கல்தூண்களும், கவனிப்பாரற்று விடுபட்ட குளங் களும் உடைந்த அணைக்கட்டுகளும் அழிந்த வருஷ நாட்டின் எஞ்சிய தடயங்க ளாக விளங்குகின்றன. இதற்கு மிக அருகில் உள்ள நரசிங்கபுரம் என்னும் ஊரும் அழிந்த நிலையில் காணப்படுகிறது.

## கோட்டைமலையும் குதிரைமலையும்

உயர்ந்து விளங்கும் இப்பள்ளத்தாக்கின் மேலே உள்ள பகுதி கோட்டைமலை என அழைக்கப்படுகிறது. இது கடல் மட்டத்திலிருந்து 6,617 அடி உயரத்தில் உள்ளது. இப்பள்ளத்தாக்கில் பெரும்பாலும் பளியர்கள் மட்டுமே காணப்படுகின்றனர். இப்பகுதி கண்டமநாயக்கனூர்

பாளையக்காரர்கள் வசம் நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. இப்பள்ளத் தாக்கின் மேற்குப் பகுதியில்தான் வருஷநாடு ஆண்டிப்பட்டி மலைத் தொடரின் உயர்ந்தப் பகுதியை காணலாம். இவ்வருஷநாட்டு மலைத் தொடர் நீண்ட நாட்களாக முறையாக ஆய்வு செய்யப்படாமல் இருந்து வந்தது. மேலும் வரைபடங்களில் 'அடர்ந்த காடுகளுடன் கூடிய உயர்ந்த மடிப்புகளுடைய மலை' ஆக குறிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வருஷ நாட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஊர்களில் நரியூத்தும், செங்குளமும் குறிப்பிடத் தக்கன.

## நரியூத்து

மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம் கண்டமனூர் பிர்க்காவைச் சேர்ந்த கிராமம் நரியூத்து. மதுரையிலிருந்து 100 கி.மீ. தொலைவில் உள்ள வருஷநாடு பகுதியில் இக்கிராமம் அமைந்துள்ளது.

## ஆட்டுக்கால் குட்டம்

நரியூத்து கிராமத்தின் மேற்கே ஒரு குன்று உள்ளது. இக்குன்றும் அதனைச் சூழ்ந்த பகுதியும் **ஆட்டுக்கால் குட்டம்** என அழைக்கப்படுகிறது. இப்பகுதி புலன் எண் 434-ல் சுமார் 6 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ளது.

## பழங்காசுகள் கண்டுபிடிப்பு

1976-ம் ஆண்டு ஆட்டுக்கால் குட்டம் பகுதியில் பொதுமக்கள் தற்செயலாகப் பாறையை வெட்டியபோது பாறையின் இடுக்குகளில் நிறைய செப்புக் காசு இருப்பது தெரியவந்தது. இச்செய்தி நரியூத்தைச் சேர்ந்த திரு.முருகேசன் மூலம் பெரியகுளம் வட்டாட்சியருக்கு தெரிவிக்கப்பட்டது. 1976-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் மேற்படி காசுகள் கிடைத்த பகுதியைப் பெரியகுளம்வட்டாட்சியர் பார்வையிட்டார். வட்டாட்சியரின் நேர்முக விசாரணையின்போது நரியூத்துப் பகுதியில் கிடைத்த பெரும்பாலான காசுகளை ஊர்ச் சிறுவர்கள் பேரீச்சம்பழத்திற்கு விற்றுவிட்டனர் என அறிய வந்தது. அப்பகுதியில் கிடைத்த எஞ்சிய காசுகள் 3 மட்டும் வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டன. இக்காசுகள் கிடைத்த ஆட்டுக்கால் குட்டம் பகுதியை ஆய்வு செய்த வாட்டாட்சியர் மேலும் இரண்டு மண்படிந்த பழங்காசுகளை அவ்விடத்தில் கண்டுபிடித்தார். இக்காசுகள் ஐந்தும் வரலாற்றுச் சிறப்பும், பழமையும் வாய்ந்ததாகக் கருதப்பட்டதால் அவற்றின் காலத்தை உரிய துறை மூலம் அறியும் பொருட்டு மதுரை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டன. மதுரைப் பதிவு அலுவலரின் ஆய்வின் போது ஒரு செப்புக்காசு இங்கு கண்டு எடுக்கப்பட்டது.

## இராஜராஜன் காசு

இக்காசின் ஒரு புறத்தில் அமர்ந்த ஈழ மனிதனின் உருவம் காணப் படுகிறது. மற்றொரு புறத்தில் அமர்ந்த ஈழ மனிதனின் உருவமொன்றும் பக்கவாட்டில் "ராஜராஜ" என நாகரி எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் ராஜராஜ என சோழ மன்னனின் பெயர் பொறிக்கப்பட்டு விளங்குவதால்

முதலாம் இராஜராஜன் காலத்துக் காசெனக் கொள்ளலாம். வருஷ நாட்டுப் பகுதியில் சோழமன்னன் முதலாம் இராஜராஜன் காலத்துக் காசு கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும். இங்கு கிடைத்துள்ள ஏனைய காசுகளும் இதே காலத்தவை. இவை சுமார் 1000 ஆண்டுகட்கு முன்பு இப் பகுதியில் புழக்கத்திலிருந்தவை என்பதை அறிகிறோம்.

### முதுமக்கள் தாழிகள்

ஆட்டுக்கால் குட்டத்தின் கீழ்பகுதியில் உள்ள சாலையின் ஓரத்தில் ஐந்து ஆண்டுகட்கு முன்பு தற்செயலாகத் தோண்டும்போது 3 முதுமக்கள் தாழிகள் கிடைத்தன. கிடைத்துள்ள பகுதி புலன் எண் 434-ல் அமைந்துள்ளது. இப்பகுதி பின்னர் மூடப்பட்டுவிட்டதாகத் தெரியவந்தது.

### சிவன் கோயில்

செங்குளம் கிராமத்திற்குக் கிழக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள கண்மாய் தென்கரையில் சிதைந்த சிவன் கோயில் பகுதி உள்ளது. அரண்மனைக் கோட்டைக்குக் கிழக்கே உள்ள இப்பகுதி **"மண்டகத்துக் கோயில்"** என அழைக்கப்படுகிறது. இங்கே அழிந்த கோயில் ஒன்றின் தடயங்கள் காணப்படுகின்றன. இக்கோயில் பகுதி புலன் எண் 436/5-ல் புறம்போக்கு நிலத்தில் அமைந்து காணப்படுகிறது. இங்கு மேற்கொண்ட ஆய்வில் சதுரமான கருவறையும் அர்த்த மண்டபத்துடன் கூடிய சிவன் கோயில் ஒன்றின் அடித்தளமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது இக்கோயிலின் அதிட்டானப் பகுதி மட்டும் எஞ்சியுள்ளது. இக்கோயிலின் சுவரும், விமானப் பகுதிகளும் இடிந்து சிதறிக் கிடக்கின்றன. இங்கு சிவ பெருமான், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூவர் அடங்கிய இலிங்கோத்பவரின் சிற்பக்குழு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது $3\frac{1}{2}$ அடி உயரம் உடையது. கி.பி. 12,13-ஆம் நூற்றாண்டைக் சார்ந்தது. இச்சிற்பம் இங்குள்ள சிவன் கோயில் கருவறை தென்திசை தேவ கோட்டத்தை அலங்கரித்திருக்கவேண்டும். இது தவிர இடிந்த கோயிலின் அதிஷ்டான வர்க்கங்கள், தூண்கள், முப்பட்டைக்குமுதம், பலிபீடம் விநாயகர் சிலை, அம்மன் சிலை ஆகியவையும் இப்பகுதியில் காணக் கிடைக்கின்றன. இக்கோயிலின் முன் 4 கால் மண்டபம் ஒன்று உள்ளது. இக்கோயில் கி.பி. 12,13-ம் நூற்றாண்டில் சிவபெருமானுக்கு எடுக்கப்பட்டது என்பது கோயிலின் ஆய்வுமூலம் தெரிய வருகிறது. தற்போது இக்கோயிலிலுள்ள பகுதி முழுவதும், குதிட்டி மரமும், தொரட்டி மரமும் நிறைந்து காணப்படுகின்றன.

### நல்லதம்பி கோட்டை

இதுவும் நரியூத்து அருகிலுள்ள செங்குளம் கிராமத்தின் தென்கிழக்கே 4 கல் தொலைவில் அமைந்துள்ளது. கி.பி. 17,18-ம் நூற்றாண்டில் நல்லதம்பி கோட்டை என்ற பெயரில் பாளையக்காரர் வசம் இருந்து வந்திருக்கிறது. தற்போது முற்றிலும் அழிந்து விளங்கும் கோட்டைப் பகுதி சில ஆண்டுகட்டு முன்பு வரை நான்கு வாசல்களுடன் விளங்கியதாகக் கூறப்படுகிறது. தற்போது அழிந்த கோட்டைப் பகுதியை 15 செண்ட் பரப்பளவில் காணலாம். இப்பகுதி

முழுவதும் சுமார் 3 அடி உயரத்தில் மண்மேடிட்டு கோட்டை மேடாக காட்சி அளிக்கிறது இப்பகுதி "அரண்மனைக் கோட்டை" என்ற பெயரிலும் அழைக்கப்பட்டு வருகிறது. அக்கோட்டைப் பகுதியில் சில ஆண்டுகட்கு முன்னர் மண்ணை அகழ்ந்தபோது ஏராளமாக செங்கற்கள் கிடைத்தாகவும், அவை சுமார் 50 வண்டிகள் வரை வெளியேற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

**யானைத் தொட்டி**

இது கோயிலுக்குத் தெற்கேயும், ஊருக்குக் கிழக்கேயும் உள்ள பகுதியில் காணப்படுகிறது. இது நீள் சதுர வடிவில் தொட்டிக்கல் போன்ற அமைப்பை உடையது. 12 அடி நீளமும் 6 அடி அகலமும் 3 அடி உயரமும் கொண்டு விளங்குகிறது. இதனை யானைத்தொட்டி என ஊரார் அழைப்பர். மழைக் காலங்களில் இதில் தேங்கும் நீரைக் காட்டு யானைகள் குடிப்பதால் இப்பெயர் வழங்குகிறது. முன்பு இங்குள்ள சிவன் கோயிலில் விழாக்காலங்களில் தீவட்டி எரிக்க இத்தொட்டிகளில் எண்ணையை தேக்கி வைப்பது வழக்கம் எனத் தெரிகிறது.

---

# கங்கைகொண்ட சோழபுரம்

## சோழ மாளிகை வரலாற்றுக் காட்சிக் கூடம்

## அடிக்கல் நாட்டுவிழா

சோழப் பேரரசன் முதலாம் இராஜராஜனின் அருமை மைந்தன் முதலாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகரமாக ஆக்கி, அங்கு மாபெரும் மாளிகையை எழுப்பி, அதில் வாழ்ந்து வந்தான். அவனுக்குப்பின் ஆட்சி புரிந்த சோழ மன்னர்களும் அம்மாளிகையில் வாழ்ந்து வந்தார்கள். அம்மாளிகை கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தன் புகழ் குன்றி மண்மேடாயிற்று. அத்தகைய சிறப்பு வாய்ந்த இடத்தில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. இவ்வாராய்ச்சியின் பயனாகச் சோழர்தம் அரண்மனைப் பகுதிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பல வரலாற்றுச் சிறப்புமிக்க பண்டைய கலைப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பொதுமக்கள் கண்டு பயன்பெற அவ்விடத்திலேயே ஒரு வரலாற்றுக் காட்சிக் கூடம் அமைக்க தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. 18-3-81 அன்று தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் காட்சிக் கூடத்தின் அடிக்கல்லை நாட்டி வைத்தார்கள். அவ்விழாவினை ஒட்டி நாதசுர இன்னிசை, வீரவிளையாட்டு, பரத நாட்டியம், கல்லூரி மாணவிகள் நடித்த **'கங்கை கொண்ட சோழன்'** நாடகம் ஆகியவை நடைபெற்றன.

# இற்றினவும் முறிந்தனவும்

சு. இராசகோபால்
கல்வெட்டாய்வாளர், தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழகக் கோயில்களில் உறையும் தெய்வங்களுக்குப் பண்டைய மக்கள் எண்ணற்ற பொன்னும், மணியும், ஆபரணங்களும் பக்தியுடன் கொடுத்துப் பணிந்து போற்றியிருக்கின்றனர். கல்வெட்டுக்களைப் பார்க்கின்றபோது குறிப்பாக ராஜராஜனின் கல்வெட்டுக்களில் குறுப்பிடப்படும் அணிகளையும், கலன்களையும் பார்க்கின்றபோது பொன்னும் மணியும் மிக எளிய முறையில் அவர்களுக்குக் கிடைத்தது என்றும், அதனால் அவற்றை ஏராளமாக வழங்கினர் என்றும் உணருகின்றோம்.

விக்கிரமசோழன் தில்லையில்,
"பைம் பொற் குழித்த பரிகல முதலாச்
செம் பொற் கற்பகத் தொடுபறி சின்னமும்
அளவிலாதன ஒளிபெற அமைத்"தான்

என்கின்றபொழுதும், குலோத்துங்கனது தங்கை குந்தவை தில்லையில் தங்கக் கலசமும், மிடாவும், கண்ணாடியும் அளித்தாள் என்கின்றபொழுதும், சோழ அரசிகள் லோகமாதேவி, செம்பியன்மாதேவி போன்றோர் எத்தனையோ அணி கலன்களைத் தந்தார்கள் என்கின்றபொழுதும், அரசியரின் அதிகாரிச்சிகள் திருவையாற்றில் ஆபரணங்கள் கொடையளித்தார்கள் என்கின்றபொழுதும், இதுபோல் இளவரசர்கள், அதிகாரிகள், சிற்றரசர்கள், வெளிநாட்டினர், வீரர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் என்று எல்லோரும் எண்ணற்ற அணிகலன்களைக் கோயில்களுக்குக் கொடையாகத் தந்தார்கள் என்கிற போதும்-இவையெல்லாம் இன்று எங்கே போயின என்ற கேள்வி இயற்கை யாகவே நமக்கு எழுகின்றது.

கொடுத்த ஆபரணங்களில் சில திருட்டுப்போயின. தமிழகத்தை வென்ற மாற்றரசர்களின் வெற்றிப் பண்டாரங்களின் திரவியம் ஆயின பல. இதுமட்டுமல்ல, நாளும் இறைவனுக்கு அணிந்து, அணிந்து நாளடைவில் பல இற்றும், முறிந்தும் போயின. ஆம் உபயோகப்படுத்தி உபயோகப்படுத்தி உபயோகமற்றுப்போயின.

இற்றவற்றையும், முறிந்தவற்றையும் என்ன செய்தார்கள்? அவற்றைக் கொடுத்தவர்கள் சந்திராதித்தவரை இருக்கவேண்டும் என்று விரும்பிக் கல்வெட்டுகள் மூலம் விருப்பத்தை வெளிப்படுத்தியதால், அவர்களது விருப் பப்படி தர்மத்தைக் காக்கவேண்டுமென்பதற்காக அப்படியே இற்று, முறிந்து பயனற்ற நிலையிலேயே வைத்துக்கொண்டு பாதுகாத்தனரா? இதற்குக் கும்பகோணத்துக்கு அருகில் உள்ள திருநாகேஸ்வரத்து இராசேந்திர சோழன் காலக் கல்வெட்டு ஒன்று விளக்கம் தருகிறது.

இக்கோயில் இறைவனுக்குக் காலங்காலமாக நாள்தோறும் பயன்படுத்திப் பயன்படுத்திப் பயனற்ற ஆபரணங்கள் அக்கோயில் பண்டாரத்தில் சேர்ந்து வந்தன. இராசேந்திரசோழனின் 30-வது ஆட்சியாண்டில், அஃதாவது கி.பி. 1042-ல் அப்பண்டாரத்தில் ஏறக்குறைய 33 பொற்பூக்கள், 2 பொற்கைத் தாமரைப் பூக்கள், பட்டம், திருக்கைக்காறை, காப்புக்காறை, ஹஸ்தபட்டிக் காறை, பாஹுவலயம், பொற்றாலி முதலிய அணிகலன் இற்றனவாகவும், முறிந்தனவாகவும் சேர்ந்து விட்டன. தேய்ந்து உருமாறிய நிலையிலும் எந்த எந்த ஆட்சியாண்டில் அவ்வணிகளையும், பொற்பூக்களையும் யார் கொடுத்தார்கள், கொடுக்கப்பட்டபோது அதன் எடை என்ன என்ற விபரங்களை அவர்கள் வைத்திருந்தார்கள். "முன்பு கல்வெட்டுப்படியும் பண்டாரப் பொத்தகப் படியும்" சரிபார்த்துப் பட்டியல் தயாரித்தார்கள்.

| அரசன் | ஆட்சி ஆண்டு | கொடை கொடுத்தவர் | கொடைப்பொருள் |
|---|---|---|---|
| கோராஜகேசரி | 5-ஆவது | உடையபிராட்டியார் கொடுத்தது. | 1 பொற்கைத்தாமரை |
| ,, | 18-ஆவது | அந்தராயத்தால் வந்த பொன் கொண்டு செய்தது. | 7 பொற்பூக்கள் |
| ,, | 16-ஆவது | ,, | 2 பாஹுவலையம் [சந்திரசேகரருக்கு] 2 கம்பி |
| ,, | 20-ஆவது | ,, | 7 பொற்பூக்கள் |
| முதல் ராஜேந்திரன் | 24-ஆவது | ,, | 7 பொற்பூ 2 திருகாப்புக்காறை [சந்திரசேகரருக்கு] |
| ,, | 25-ஆவது | ,, | 2 பொற்பூக்கள் |
| ,, | 26-ஆவது | ,, | 7 பொற்பூக்கள் |
| ,, | ,, | பநங்காட்டுப்புதூர் உடையான் நாயகத்தால் செய்தது | 1 பொற்பூ 2 ஹஸ்தபட்டி காறை 2 தாலி |
| ,, | 7-ஆவது | ஜநநாதபுரத்து வியாபாரி ரிஷப வாகன மாயிலட்டி கொடுத்தது. | ரிஷபவாகனருக்கு யாதோ ஒன்று ... (கல்வெட்டு சிதைந்து விட்டது.) |
| ,, | ,, | காட்டுப்புத்தூர் உடையான் நாயகத்தில் செய்தது. | 1 பட்டி |

| | | | |
|---|---|---|---|
| முதல் இராஜேந்திரன் | 7-ஆவது | சிலரது நாயகத்தால் செய்தது. | 3 பட்டம் |
| ,, | 13-ஆவது | பாலாசிரியன் | 1 பொற்றாமரை |
| ,, | ,, | ,, | 1 பொற்பூ |
| ,, | ,, | பீடலிகை வரியால் வந்த பொன்கொண்டு செய்தது. | 1 பொற்பூ |

இவ்வாறு அவர்களுக்குப் பல அணிகளையும், பூக்களையும், மேலும் அவற்றின் எடை அளவுகளையும் காட்டிநின்றன கல்வெட்டுகளும் பண்டாரப் பொத்தகமும்.

இப்படிச் சேர்ந்த இவ்வணிகலன்களையும், பூக்களையும் என்ன செய்வது என்று அறியாத கோயிலைச் சேர்ந்தவர்கள் அரசனின் அதிகாரியை அணுகினர். இராசேந்திர சோழனின் அதிகாரி, இராசேந்திரசோழ மூவேந்தவேளான் இற்றிய, முறிந்த நகைகளைக் கருத்தில் கொண்டு,

"பல பொற்பூக்களும், சில பணிகளாய் வந்த பொன்னும். இற்றனவும் முறிந்தனவும் இட்டுத் திருநாகீஸ்வரமுடையார்க்கு திருக்கொள்கையுந் திருக்கொடுக்கும் திருக்கோசகமுமாகப் பண்ணிச் சாத்துக" என்று ஆணை பிறப்பித்தான்.

இந்த ஆணை பாம்பூர்நாடு வகைசெய்கின்ற கோடந்திட்டை உடையானுக்கும். குடமுக்கில் உள்ள அதிகாரிகளுக்கும், அவ்விறைவனது ஸ்ரீ காரியம் பார்க்கின்ற கிடாரங்கொண்ட சோழ மாயிலட்டிக்கும் கிடைத்தது. அவர்கள் ஸ்ரீகோயில் வாரியம் செய்வார்க்கும். தேவகன்மிகளுக்கும், பண்டாரிகளுக்கும், கரணத்தாருக்கும், மற்றுமுள்ளோருக்கும் கீழ்ஆணை பிறப்பித்தனர். ஜயசிங்க குலகால விழுப்பரையன் என்பவன் ஒரு கூட்டம் கூட்டினான்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ கோயில் வாரியத்துக்காக | — | சந்திரன் தாநதொங்கனான கடாரங் கொண்ட மாயிலட்டி முதலானவர்களும், |
| பண்டாரிகளுக்காக | — | திருக்கண் ஆராஅமுதும், |
| சிவ பிராமணர்களுக்காக | — | பாரதாயன் நங்கனங்காடியும், |
| கோயில் கண்காணிக்காக | — | மத்யஸ்தன் அரங்கனும், |
| திருமெய்காப்புக்காக | — | வெண்காடன் பெருமங்கலம், சுப்ரமணியன் சிங்கன் ஆகியோரும், |
| மாகேஸ்வரருக்காக | — | ருத்ர கிரமவித்தனும், |
| திருப்பதியம் விண்ணப்பிப்பாருக்காக | — | நம்பியாரூரனும் |

ஒன்று கூடி கண்காணிகளாக — மேற்பார்வையாளர்களாக அமர்ந்தனர். பண்டாரி திருக்கண் ஆராவமுது இற்றினவும், முறிந்தனவுமான ஆபரணங்களை ஒவ்வொன்றாகக் கல்வெட்டு, பண்டாரப் பொத்தக ஆதாரங்களின்படி எடுத்து வைத்து அவை கொடுக்கப்பட்டபோது என்ன எடை இருந்தது என்று கூறினான்.

அவை ஒவ்வொன்றாக எடை எடுக்கப்பட்டன எடை நிறுப்பதற்கென்றே கங்கைகொண்ட சோழபுரத்தில், அதாவது அப்போதைய தலைநகரில், மும்முடிச் சோழப் பெருந்தெருவில் வசித்த வியாபாரி, பிரமகுட்டன் உலகளந்தான் என்பவன் வரவழைக்கப்பட்டு அவன் துலாக்கோல் தூக்கி நிறை எடுத்தான். தன்மக் கட்டளைக்கல் என்ற எடைக்கல்லால் எடை எடுக்கப்பட்டது. இந்தக் கல் வழக்கில் இருந்த எடைக்கு எவ்வளவு சமமானது என்றும், கொடுக்கப் பட்ட காலத்தில் என்ன எடை, இப்பொழுது என்ன எடை, வேறுபாடுகள் என்ன, தேய்ந்து குறைந்தது எவ்வளவு என்பன போன்ற விபரங்களைக் கண்டறிந்தார்கள். இவை பதிவு செய்யப்பட்டன.

இற்றதாலும், முறிந்ததாலும், தேய்ந்ததாலும் சிறிது எடை குறைந் திருந்தன. உதாரணமாக இராசேந்திர சோழனின் 13-ஆவது ஆட்சியாண்டில் பாலாசிரியன் கொடுத்த பொற்றாமரை 21 கழஞ்சு எடையிருந்தது. திரும்பவும் எடை எடுத்த போது 30-ஆவது ஆண்டில், அதாவது 17 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ந்து பயன்படுத்திய காரணத்தால், அப்பொற்றாமரை 2 கழஞ்சு குறைந்து 19 கழஞ்சாக இருந்தது.

இப்படி எடையெடுக்கப்பட்ட பொருள்களின் மொத்த எடை என்ன என்று கண்டு, அந்த மொத்தப் பொன்னைக்கொண்டு இறைவனுக்குப் புதிதாகத் திருக் கொள்கை [கவசம்], திருக்கோச்கம் [இறைவியின் சேலை போன்ற அங்கி], திருக்கொடுக்கு (?) முதலியவை செய்து அணிந்து மகிழ்ந்தனர்.

இக் கல்வெட்டு பண்டைய கோயில்களில் அணிகலன்களும் பிறவும் எவ்வளவு கவனமாகப் பாதுகாக்கப்பட்டுப் போற்றப்பட்டன; பயனற்றவை எவ்விதம் அரசு அனுமதியோடு புதுப்பிக்கப்பட்டன என்பதற்குச் சிறந்த சான்று ஆகும். இவ்வித கண்காணிப்புகள் இருந்தபோதிலும் தவறுகள் நிகழாமல் இல்லை. இதே கோயிலில் மூன்றாம் ராசராசன் காலத்தில் கோயில் கணக்கர் கள் கோயில் பணத்தை அபகரித்ததையும், இவர்கள் குற்றம் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அரசாணை பெறப்பட்டு, இவர்கள் சிவத்துரோகிகளாக அறிவிக்கப்பட்டு, இவர்கள் பெற்றிருந்த கணக்கர்களுக்கான காணிகள் கைப் பற்றப்பட்டு, பிற உடைமைகள் ஏலமிடப்பட்டுத் தண்டிக்கப்பட்டதையும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[2] எனினும் இச்செய்திகள் சோழர்கால நிர்வாக அமைப்புத் திறனுக்குச் சிறந்த சான்றுகளாகும்.

1. S.I.I. Vol. VI No. 33
2. A.R.E. 70, 71/1932

# முதலாம் இராஜேந்திரன் காலத்திய வருவாய்த்துறை

ப. சண்முகம்
விரிவுரையாளர், தொல்பொருளியல் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5

தமிழக வரலாற்றில் சோழராட்சிக் காலத்தில் வருவாய்த்துறை சிறப்பாகச் செயல்பட்டது. சில சிறப்பு அமைப்புகள் சோழர் காலத்தில் புதியதாய் உருவாக்கப்பட்டன என்றாலும் பல தன்மைகள் தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளன. மேலும் சோழமன்னர் ஆட்சிக் காலத்தில் தமிழகம் முழுவதும், அல்லது சோழர் கைப்பற்றியாண்ட நிலப்பகுதி முழுமையும் ஒரே விதமான வருவாய்த்துறை அமைப்பு இருந்தது என்னும் தவறான கருத்து வரலாற்றாசிரியர்களிடத்தே காணப்படுகிறது. சுமார் 425 ஆண்டுகாலச் சோழராட்சியில் வருவாய்த்துறையில் மாறுதல்களே இல்லை என்பதும் குறைபாடுடைய கருத்தாம். இம்மாறுதல்களைப்பற்றியும், சோழர்கால வருவாய்த் துறையின் வளர்ச்சியைப்பற்றியும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்ட தென்றாலும் ஒருவகையான மாறுதலும் வளர்ச்சியும் சோழர் வருவாய்த் துறைக்குப் புதியன அல்ல என்பதை எடுத்துக் காட்டவேண்டுவது தற்போது சிறப்பாகத் தோன்றுகிறது. முதலாம் இராஜேந்திரன் காலத்தில் திருச்சிராப்பள்ளிப் பகுதியில் சோழர் வருவாய்த்துறையின் சில சீரிய இனங்களைப்பற்றி ஆராய்வதே முக்கிய நோக்கமாகும். தற்போதைய புதுக்கோட்டை மாவட்டத்தையும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் மேற்குப் பகுதியான கரூர் தாலுக்காவையும் இவ்வாய்வுக்குச் சேர்த்துக்கொள்ளவில்லை. தற்போதைய கரூர் தாலூகா கொங்குமண்டலத்தைச் சார்ந்ததென்பதாலும், புதுக்கோட்டை தனி மாவட்டமாக 1974-ல் அமைக்கப்பட்டு விட்டதாலும் ஏற்பட்டதே இப் பாகுபாடு.

வருவாய்த்துறை பல்வேறு பிரிவுகளை உடைய பெரிய அமைப்பென்பதாலும், இதன் முக்கிய சில கூறுகளான வருவாய் இனங்கள் (Sources of Revenue), வரிவிகிதங்கள் (Tax Assessment), மற்றும் வருவாய்த்துறை அலுவலர் ஆகியவை பற்றி மட்டுமே இங்கு ஆராயப்பட்டுள்ளது. வரித்துறைக்கோட்பாடுகள், அளவைகள், வரிப்பளு, மற்றும் வருவாய்த்துறையின் பிற அம்சங்களைப் பற்றிப் பின்னர் ஆராயப்படும். இக்கட்டுரைக்கு ஆதாரமாக அமைந்த கல்வெட்டுகள் மிகச்சிலவாகும். இராஜேந்திரன் காலத்திய வெளியிடப்பட்ட 29 கல்வெட்டுகள் மட்டுமே இக்கட்டுரைக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது[1].

பொதுவாக சோழர் கல்வெட்டுகள் 500க்கும் மேற்பட்ட வரிஇனச் சொற்களைத் (Revenue Terms) தருகின்றன. இவைகள் சோழராட்சிபுரிந்த பகுதிகளிலிருந்து திரட்டியவையாகும். இவற்றுள் சுமார் 250 சொற்கள்

சோழ மண்டலத்தில்[2] மட்டுமே கிடைக்கின்றன. இவற்றுள் (1) அங்காடிப் பாட்டம், (2) அந்தராயம், (3) சென்னீர் வெட்டி, (4) எச்சோறு, (5) இறை, (6) கடமை, (7) குடிமை, (8) வாசலில் போந்த குடிமை, (9) வெட்டிவேதனை ஆகிய ஒன்பது சொற்கள் சோழ மண்டலத்தில், சாதாரணமாக எல்லாக்காலங் களிலும் பயன் படுத்தப்பட்டுள்ளன. அதாவது இவ்வொன்பது வரி இனங்கள் சோழராட்சியில் முக்கியமானவையாகக் கருதப்பட்டுள்ளன. திருச்சிப் பகுதியில் மட்டும் சோழராட்சிக் காலத்தில் மொத்தம் 75 சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவற்றுள் செந்நீர் வெட்டி (15), எச்சோறு (41), இறை (54), கடமை (13), வெட்டிவேதனை (22) ஆகிய ஐந்து சொற்கள் முக்கியமானவை யாகத் தோன்றுகின்றன. இவ் ஐந்து சொற்களும், ஏற்கெனவே குறித்தவாறு சோழமண்டலத்தில் முக்கியமாக வழக்கிலிருந்த சொற்களாகும்.

இராஜேந்திரன் காலத்தில் திருச்சிப்பகுதியில் பதினாறு சொற்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

1. இறை
2. ஊர்க்கழஞ்சு
3. ஊரிடுவரி
4. எச்சோறு
5. கடமை
6. காலாற்கூலி
7. குடிமை
8. குமாரக்கச்சாணம்
9. குலை குரம்பு செய்நீர் வெட்டி
10. கோலாற்கூலி
11. சித்தாயம்
12. சில்வரி
13. திருவாசலில் போந்த குடிமை
14. பெருவரி
15. வெட்டி வேதினை
16. வெள்ளான் வெட்டி.

இவற்றுள் இறை, திருவாசலில் போந்த குடிமை, செந்நீர் வெட்டி, எச்சோறு, கடமை, வெட்டி வேதினை ஆகிய ஏழு சொற்கள் சோழர்கால முழுமைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை முன்னர் குறித்தோம். எனவே இராசேந்திரன் காலத்தில் திருச்சிப்பகுதியில், சோழர் வருவாய்த் துறையில் பெரும் மாறுதல் இருந்தது என்று கருத இயலாது.

இனி வரிஇனங்களைக் காண்போம். இக்காலத் திருச்சிப்பகுதியில் **இறை** அதிகமாக வழக்கில் கையாளப்பட்டுள்ளது. இதனால் இவ்வரி இனத்தை முக்கிய வருவாய் இனமாகக் கருதலாம். அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரி இனத்தையே 'இறை' குறித்தது. நில வரியை மட்டுமே இச்சொல் குறித்தது என்று சில அறிஞர் கருதுவர். அது தவறானதாகும். இராஜேந்திரன் காலத்திலேயே இச்சொல் நிலவரி அல்லாத வேறுவகை வரி இனத்தைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது. சில்லறை வருவாய் இனங்களைக் குறிக்கச் **சிற்றிறை**[3], **கீழிறை**[4] என்பன வழக்கிலிருந்துள்ளன. வீடு, அல்லது வீட்டுப் பரப்பின்மீது விதிக்கப்பட்ட வரி **மனையிறை**[5] என வழங்கப்பட்டது. பல் வகைப்பட்ட வரி இனங்களைக் குறிக்க **பலவிறை**[6] எனவும், தறியின் மீது விதிக்கப்பட்ட வரி **தறியிறை**[7] எனவும் வழங்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து நிலவரியைக் குறிக்க மட்டுமே இறை என்ற சொல்லை இக்காலத்தில் பயன் படுத்தவில்லை என்று உறுதியாகக் குறிப்பிடலாம்.

**ஊர்க்கழஞ்சு** என்பது வணிக நகரத்தார் மீது விதிக்கப்பட்ட வரியைக் குறிக்கலாம். **ஊரிடுவரி** என்பதும் முன்னதைப் போன்று ஊரார் மீது விதிக்கப் பட்ட வரியாகலாம். இவ்வரியை ஊரார் அனைவரும் சேர்ந்து மொத்தமாகச் செலுத்தினர் என்று கருதுவதற்குச் சான்றுகளில்லை. பெரும்பாலும் ஊர் மக்கள் தனித்தனியாக இவ்வரியைச் செலுத்தினர் என்பதை இராஜராஜனின் கல்வெட்டுச் சான்றைக் கொண்டு மெய்ப்பிக்கலாம். இராஜராஜன், தன் 16-ஆம் ஆட்சி ஆண்டு வரை ஊரிடு வரிப்பாட்டைச் செலுத்தாதவர்களின் நிலங்களை அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளான். இவ் வாணை அவன் ஆட்சிப் பரப்பளவு முழுவதுக்கும் செயல்பட்டது என்பதையும் அக்கல்வெட்டு உணர்த்துகிறது. நில அளவையின் அடிப்படையில் ஒரு கழஞ்சு பொன் வரியாக வசூலிக்கப்பட்டது போலும்.

**எச்சோறு** என்னும் வரி இனம் சோழர் வருவாய் இனங்களில் முக்கிய மானதொன்றாகும். அலுவல் காரணமாக ஊர்ப்பயணம் செல்லும் அதிகாரி களுக்கும் அவர்கள் துணைவர்களுக்கும் செய்யப்பட வேண்டிய பணிகள், அளிக்கப்பட வேண்டிய காணிக்கைகள் ஆகிவவற்றையே இச்சொல் குறித்தது. இராக்காலங்களில் அரசியல் அலுவலர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உணவு என்றும் ஒருசாரார் பொருள்கொள்வர். இவ்வரி அவ்வப்பகுதிமக்கள் பொதுவாக ஒன்றுசேர்ந்து செலுத்தும் சிறப்புக் கட்டணங்கள், அல்லது காணிக்கை களாக இருக்கலாம். பொதுவாக இவை பொருளாகத் தரப்பட்டன. இராசேந்திரன் காலத்திற்குப் பின்னர் இச்சொல் ஒரே முறை பயன்படுத்தப் பட்டிருத்தலால் இவ்வழக்கம் அழிந்து பட்டிருக்கலாம். சோழமண்டலத்தில் இவ்வழக்கம் சற்று மாறுதலுக்குட்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவ்வழக்கம் இராஜேந்திரன் காலத்திற்குப் பின்னர் ஏற்பட்டிருக்கக்கூடும்.

**கடமை** என்ற வரி சோழர்காலத்தில் சற்று முக்கியத்துவம் வாய்ந்த தாகும். பெரும்பாலும் நிலவரியையே இச்சொல் குறித்தது. ஆயினும் பொதுவாக வரியைக் குறிக்கவும் இச்சொல் கையாளப்பட்டுள்ளது. இரா ஜேந்திரன் காலத்திற்குப் பின்னால், இறை என்னும் ஆரம்பகாலச் சொல்லை விலக்கிவிட்டு இச்சொல் (கடமை) ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கிறது. உத்தம சோழன் காலத்திலிருந்து மெள்ள மெள்ள ஆட்சி செய்ய ஆரம்பித்த சொல் (கடமை) இராஜேந்திரன் காலத்திற்குப் பின்னர் முழுமையாக நிலவரியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இராஜேந்திரன் காலத்தில் இச்சொல் திருச்சிப் பகுதியில் 2 முறைதான் பயன் படுத்தப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்தபோதிலும், இராஜேந்திரனுக்குப் பின்னர் 13 தடவைகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இதேகாலத்தில், இறை 8 முறை மட்டுமே பயன் படுத்தப்பட்டுள்ளது. சோழமண்டலத்தில் கடமை ஐயத்திற்கிடமின்றி அதிகமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதை நோக்கும்போது இராசேந்திரன் காலத்தில் வரி குறித்த சொற்களின் அமைப்பு மற்றும் பிரயோகத்தில் ஓரளவு மாறுதல்களும் ஏற்பட்டுள்ளன என்று எண்ணுவதில் ஆச்சரிய மேதுமில்லை.

**காலாற் கூலி**, மற்றும் **கோலாற் கூலி** ஆகிய இரண்டு சொற்களும் ஒவ்வொரு தடவைதான் இப்பகுதியில் தோன்றுகின்றன. இவ்விரண்டும்

அளவைகளின் அடிப்படையில் விதிக்கப்பட்ட வரியாகும். முகத்தலளவையை (கால்) அடியாகக்கொண்டு தானியங்கள், இன்ன பிற பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வரி காலாற் கூலியாகும். நிறுத்தலளவையின் அடியாகக் கொண்டு பிற பொருட்களின் எடை வீதத்தின் மீது விதிக்கப்பட்டவரியே கோலாற் கூலியாகும். அதாவது வணிகப் பொருட்களை விற்பனை செய்யுங் காலையில் விதிக்கப்பட்ட வரி இனங்கள் இவையாகும்.

குடிமை என்பது, குடிகள் மீது விதிக்கப்பட்ட வரியைக் குறிக்கும். பெரும்பாலும் வெள்ளான் குடிகளே இவ்வரியைச் செலுத்தினர் எனலாம். இச் சொல்லும் இராசேந்திரன் காலம் முதற்கொண்டு முக்கியத்துவம் பெறுகிறது.

**குமாரக்கச்சாணம்** என்பதன் பொருள் சரிவர விளங்கவில்லை. ஒரு கத்த யானம் (அல்லது கச்சாணம்) செலுத்தினர் என்று குறிக்கலாம். குமாரக் கடவுளின் தேவைகளுக்கு இவ்வரி விதிக்கப்பட்டிருக்கலாமோ என்று தோன்று கிறது.

**வெட்டி** அல்லது **வெட்டிவேதினை** எனப்படும் வரி இனம் சோழர் வருவாய்த்துறையில் மற்றுமொரு முக்கிய வரி இனமாகும். பொதுவாக எவ்வித ஊதியமும் பெற்றுக் கொள்ளாமல் அரசுக்கு, அல்லது ஊருக்குச் செய்யப்படும் ஊழியமே வெட்டி எனப்படுவதாகும். ஊழியமாக இது தரப்பட்டாலும்கூட இதனை வரிஇனமாக எடுத்துக்கொள்வதே முறை. எவ்விதச் செலவுமின்றி நாட்டின் தொழில் தேவைகள், மராமத்துப் பணிகள் பூர்த்தியடைந்துவிடுகின்றன என்பதால் இவ்வாறு கருதுதல் தகும். நீர் கிடைக்காத காலங்களில் ஆற்றுக்கு குறுக்கே அணைகட்டி ஊற்று நீரைத் தேக்கி விவசாயம் செய்வதற்கு உதவும் ஊழியத்தை குலை குரம்பு செய்நீர் வெட்டி என்று குறித்தனர். தற்காலத்தில் பொதுப்பணித்துறையாற்றும் பணியினை அக்கால மக்களே செய்தனர். வெட்டி வேதினையும் இவ்வகைப்பட்டதே. ஆயினும் இம்முறையில் மக்கள் செய்ய வேண்டிய ஊழியம் எவ்வகைப்பட்டது என்று முறையாக விளக்கப்படவில்லை. பொதுவாக ஊதியம் பெறப்படா ஊழியம் அனைத்தும் இதிலடங்கும், வெள்ளான் வெட்டி என்பதும் இவ்வாறானதே. வெள்ளான் பணிகளுக்கு செய்யும் ஊழியத்தைக் குறித்தது. அதாவது, நீரோடு கால்களைச் சீரமைத்தல் குளக்கரைகளைக் கெட்டிப் படுத்துதல் போன்றவை எனலாம்.

**சித்தாயம், சில்வரி** ஆகிய இரண்டும் சில்லறை வரி இனங்களைக் குறிப் பிடும். இவற்றுள் பல வரி இனங்கள் அடங்கியிருக்கலாம். ஆயினும் அதன் முழுமை வடிவம் தெரியவில்லை. இவ்வரிகள் இராஜேந்திரன் காலம் தொட்டு முக்கியத்துவம் பெறுகின்றன. **பெருவரி** என்பதும் இவ்வகைப்பட்ட வரிஇன மாகும். ஆயினும் இதன் சிறப்பியல்புகள் நன்கு புலனாகவில்லை.

அரசனுக்கு குடிகள் செய்யவேண்டிய ஊழியத்தைக் குறித்தது **திருவாசலில் போந்த குடிமை** என்ற சொற்றொடர். அதாவது அரசனைக் காணும்போதும், அரசனுக்கு விண்ணப்பிக்கும்போதும், செலுத்தப்பட வேண்டிய காணிக்கைகள் இவைகளாகலாம்.

அடுத்து வரிவிகிதங்களைக் காண்போம். தமிழகத்தைப் பொறுத்த அளவில் $\frac{1}{6}$ பகுதியே நிலவரி விகிதமாக இதுவரை கருதப்பட்டுள்ளது. இவ் வரி விகிதம் தர்மசாஸ்திரங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டவை. பழங்காலத் திலும், சோழராட்சிக் காலத்திலும் $\frac{1}{6}$ என்ற வரிவிகிதம் வழக்கில் இருந்ததற்கான சரியான ஆதாரம் இல்லை. $\frac{1}{6}$ எனப்படும் வரிவிகிதம் பரவலாகச் சோழர் கல் வெட்டுகளில் காணப்படவில்லை. இராசேந்திரனின் கல்வெட்டுகள் கூட இவ் வரிவிகிதத்தைக் குறிப்பிடவில்லை. ஆயினும் $\frac{1}{6}$ க்கும் அதிகமான வரிவிகிதத்தைக் கர்நாடக மாநிலத்தில் கிடைக்கும் சோழர் கல்வெட்டுகள் குறிக்கின்றன. உதாரணமாக நன்செய் நிலத்தின் மீது $\frac{2}{5}$ பகுதி வரிவிதிக்கப்பட்டது.[8] மேலும் தஞ்சைப் பெருவுடையார் கோவில் கல்வெட்டுகளின் அடிப்படையில் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் $\frac{1}{5}$ பகுதி வரிவிகிதம் இருந்ததெனக் குறிப்பார்.[9] எனவே $\frac{1}{6}$ பகுதி வரிவிகிதம் மட்டுமே சோழர் காலத்தில் வழக்கிலில்லாமல் சற்றுக் கூடுதலாகவே வரிவிகிதம் இருந்தது என்று குறிக்கலாம்.

கங்கை கொண்ட சோழபுரத்து வீரராஜேந்திரன் காலக் கல்வெட்டு, முதலாம் இராஜேந்திரனின் 23, 24, 30-ஆம் ஆட்சியாண்டுகளில் தரப்பட்ட ஊர்களைக் குறிக்கின்றது. அவ்வாறு குறிக்கும்போது, வரியாகச் செலுத்தப் பட்ட நெல் அளவைக் குறிக்கிறது. இக்கல்வெட்டுச் செய்திகளை விரிவாக ஆராய்ந்த, டோக்யோ பல்கலைக் கழகப் பேராசியர், நொபுரு கராஷிமா என்பார், ஒரு வேலிக்குச் சுமாராக 100 கலம் நெல் வசூலிக்கப்பட்டுள்ளது என்பர்[10]. இந்த அளவு சில ஊர்களுக்குக் குறைவுபட்டும் உள்ளது. 95 கலம், மற்றும் 77 கலம் வரியாகத் தந்துள்ளனர். இவ்வாறு மாறுபட்ட வரித்தீர்வைக் கான காரணத்தை விளக்க முனைந்த அப்பேராசிரியர், நிலத்தின் தன்மை, மற்றும் விளைச்சலின் அடிப்படையில் குறைத்து அல்லது அதிகரித்து வரி விதிக்கப்பட்டது என்பார். அதாவது நீர்ப்பாசனம் நன்கு அமைந்து, விளைச் சலும் நன்கமையப்பட்ட நிலங்கள் அதிக அளவு வரி செலுத்தின என்பார்.

இக்கருத்துக்குத் துணைச் சான்றாக இன்னும் சில கல்வெட்டுகளைச் சுட்டலாம். ஓராண்டுக்கு 50 கலம் நெல்லுடன் 50 காசும் அளிக்கவேண்டும் என்று தொடையூர் கல்வெட்டு[11] குறிக்கும். அல்லூர் கல்வெட்டோ, ஒரு மா அளவு நிலம் ஆறுகலம் நெல்லை வரியாகச் செலுத்த வேண்டும் என்று பகரும்.[12] அவ்வாறெனில் ஆண்டொன்றுக்கு 120 கலம் நெல், ஒரு வேலி நிலத்திற்கு வரியாகச் செலுத்தவேண்டும். உய்யக்கொண்டான்திருமலை கல்வெட்டோ 100, மற்றும் 110 கலம் நெல் செலுத்த வேண்டும் என்று தன்னுடைய வரி விகிதத்தைக் குறிப்பிடுகிறது[13]. இவை தவிர திருச்சிப் பகுதியைச் சாராத கல் வெட்டுகளும் கூட மாறுபடும் வரி விகிதங்களைக் குறிக்கின்றன. எனவே $\frac{1}{6}$ எனப்படும் வரிவிகிதம் மட்டுமே வழக்கிலிருந்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டு வதில்லை. மாறுபடும் வரிவிகிதம் வழக்கில் இருந்துள்ளது என மேலே காட்டிய ஆதாரங்களிலிருந்து முடிவெடுக்கலாம். இம்மாறுபடும் வரிவிதங்கள் நிலத்தின் இயல்பு, விளைச்சல் ஆகியவற்றுக்குத் தக்கவாறு அமைந்தன என்பதும் தெளிவு. நன்செய், புன்செய் நிலங்கள் மீது தனித்தனியாக வரி விதிக்கப்பட்டன.

மாறுபட்ட வரிவிகிதங்களை நிர்ணயம் செய்வதற்கு நிலங்கள் தீர்வை (Revenue Survey) செய்யப்பட்டன. இவ் வகையான நிலத்தீர்வைமுறை

சோழருக்கும் முற்பட்டதென்றாலும், சோழர்கள் இம்முறையினைச் செப்பம் செய்தனர் எனலாம். இராஜேந்திர சோழன் காலத்தில் இரண்டு தடவைகள் நிலத்தீர்வை நடைபெற்றுள்ளது. இவ்விரண்டு நில அளவைகளும், தஞ்சை மாவட்டம் திருவிசலூரில் செய்யப்பட்டனவாம். முதலாவது நிலத்தீர்வை இராஜேந்திரனது 5-ம் ஆட்சி ஆண்டிலும்,[14] இரண்டாவது அவனுடைய 29-ம் ஆட்சி ஆண்டிலும்[15] செய்யப் பெற்றனவாம். திருச்சிப் பகுதியில் இராசேந்திரன் காலத்தில் நிலத்தீர்வை நடைபெற்றதற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை.

ஆயினும் ராஜேந்திரன் காலத்தில் நிலத்தீர்வை செய்வதற்கு பயன் படுத்திய நில அளவைக் கோல்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் கிடைத் துள்ளன. அவற்றுள் சிற்றம்பலத்துக் கோல்,[16] ராஜராஜன் கோல்,[17] ஊர்க் கோல்[18] மற்றும் பதினாலடிக் கோல்[19] ஆகியவற்றைக் குறிப்பிடலாம். திருச்சி மாவட்டத்தில் சில கோவில்களில் நில அளவைக் கோல்கள் வெட்டப்பட்டிருப் பினும், இராஜேந்திரன் காலத்தன எவை என்று நிர்ணயிப்பது சற்றுக் கடினமானது.

இராஜேந்திரன் கால அலுவலர்கள் பலர் நமக்குத் தெரியவருகின்றனர். ஆட்சியை நடாத்திச் செல்வதில் துணை புரிந்த பொது வகை அலுவலர்களைத் தவிர்த்து, வருவாய்த்துறையுடன் தொடர்பு கொண்ட ஒரே ஒரு அலுவலரை மட்டுமே இங்கு காணலாம். புரவுவரித்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நாடு அளவில் பணியாற்றிய முக்கிய அலுவலரைப்பற்றித் திருப்பலாத் துறை[20] கல்வெட்டு குறிக்கிறது. உறையூர் கூற்றத்து நாடு வகை அதிகாரியான காரிகுடையான் வீர சோழன் பிரளய சிந்தாமணி இப்பகுதியில் தானமளித்த செய்தியை அக்கல்வெட்டு குறிக்கிறது. இவ்வதிகாரியின் அலுவலைப்பற்றி அக் கல்வெட்டு ஒன்றையும் குறிக்கவில்லை. மற்ற கல்வெட்டுகளை ஒட்டி நோக்கி இவ்வலுவலரின் பணிகளை விவரிக்கலாம். இவ்வகை அதிகாரிகள் புரவு வரித் திணைக்களத்தோடு தொடர்பு கொண்டு நாடு அளவில் பணியாற்றி வந்த போதிலும், வேறு பணிகளையும் செய்துவந்துள்ளனர். இவ்வலுவலர்கள் முதற் பராந்தகன் கால முதற்கொண்டு பணியாற்றி வந்துள்ளனர். கோவிற் பணிகளை மேற்பார்வையிடவந்த அதிகாரி என்னும் அரச உயர்மட்ட அலு வலருக்கு நாடுவகை துணையாகச் சென்றுள்ளான்.[21] மற்றோரிடத்தில் அதிகாரியின் ஆணையின் பேரில் கோவிலில் சேர்த்துவைக்கப்பட்ட தங்கத்தை நகைகளாக மாற்றித் தந்துள்ளான்.[22] இவ்விரண்டு சான்றுகளும் முறையே சித்தூர், தஞ்சை மாவட்டப் பகுதிகளைச் சார்ந்த கல்வெட்டுகளிலிருந்து பெறப் பட்டவையாகும். இச்சான்றுகளின் மூலம், அதிகாரி என்போன் அரசின் உயர் அலுவலர் எனவும், இவ்வதிகாரிக்குக் கீழ்ப்பட்டவகையில் நாடுவகை அலுவலர் பணியாற்றினர் என்றும் புலப்படும்.

இராஜேந்திரன் காலத்தில் வரிப்பளு எவ்விதமிருந்தது என்பதை இப் பகுதியில் கிடைக்கும் ஒரே கல்வெட்டைக் கொண்டு அறிய முயலலாம். 15 ஆண்டுகள் வரி கொடுக்கமுடியாமல், குடிபெயர்ந்த பரிதாபச் சம்பவத்தை ரத்னகிரி கல்வெட்டு[23] தெரிவிக்கிறது. 15 ஆண்டுகள் வரி செலுத்தாததன் காரணம் வரிப்பளுவாக இருக்கலாம். ஆயினும், 15 ஆண்டுகள் வரி

வசூலிக்காமல் இருந்ததிலிருந்து அரசாங்கம் வரி கொடுக்காதவர்களை அதிக மாகக் கொடுமைப்படுத்தவில்லை என்றும் வாதிக்கலாம். ஆயினும், இவ்வொரு சான்றின் அடிப்படையில் இவ்வாறு முடிவு கட்டுதல் சரியன்று.

மேலே குறித்தவைகளை நோக்கும்போது சோழராட்சியில், பிறபகுதி களில் நிலவிவந்த வருவாய்த்துறைக்குச் சற்று மாறுபட்ட அமைப்பைத் திருச்சிப் பகுதியில் இராஜேந்திரன் காலத்தில் காணுகிறோம். தட்டாரப்பாட்டம், தறியிறை போன்ற முக்கிய தொழில் துறையினரின் மீது விதிக்கப்பட்ட வரிகளைப்பற்றிய எச்செய்திகளையும், இக்காலக் கல்வெட்டுகள் குறிக்காதது வியப்பாக உள்ளது. ஆயினும் இராஜேந்திரன் காலத்தில் வழக்கொழிந்தன என்று அவசரமாகவும் முடிவு கட்டுதல் கூடா. பிற்காலத்திய கல்வெட்டுகள் சில வரிச்சொற்களைக் குறிக்கின்றன. ஆயினும், இராஜேந்திரன் காலத்தில், திருச்சிப் பகுதியில் மாற்றங்களுடன் கூடிய வருவாய்த்துறை இருந்ததென்பது ஏற்கவேண்டிய கருத்தாம்.

---

1. "தென்னிந்திய கல்வெட்டுகள்" (இந்நூல் இனிமேல் தெ. க. என்று குறிக்கப்படும்). தொகுதி 4, எண். 538, 544; தெ. க. 5. 635, 636, 637, 638, 639, 651, 665, 678, 1413; தெ. க. 8. 559, 583, 613, 644, 671, 674, 677, 683, 702; தெ. க.–19. 330; தெ. க.–22. 166., "தென் இந்திய கோயில் சாசனங்கள், எண். 757; இந்திய அரசின் கல்வெட்டுத் துறை ஆண்டறிக்கைகள் – 1908. எண் 463; 1914—188, 189; 1937-38—157, 159; 1943-44—229.
2. தற்போதைய திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களும், தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தென்பகுதியும் கொண்டது.
3. தெ. க. 19. 378.
4. "புதுக்கோட்டை கல்வெட்டுகள்" (IPS) 148, 187.
5. தெ. க 8. 577.
6. "எபிகிராபியா இண்டிகா" 15. 5.
7. தெ. க. 14. 194.
8. "எபிகிராபியா கர்னாடிகா" 9. Nl. 25.
9. K. A. Nilakanta Sastri, The Colas,
10. Noboru Karashima, "Land Revenue Assessment in Cola Times" as seen in the inscriptions of the Thanjavur and Gangaikonda Cholapuram Temples.
11. இந்திய கல்வெட்டிலாகா ஆண்டறிக்கை. A.R.E. 1937-38, எண். 159.
12. தெ. க 8. 677.
13. A.R.E. 1908, எண். 463.
14. A.R.E. 1907, எண். 349.
15. A.R.E. 1907, எண். 347.
16. தெ. க. 3. 54.
17. A.R.E. 1916, எண். 400.
18. "எபிகிராகியா கர்னாடிகா" (E. C.), 9, C.P. 82, 83.
19. தெ. க. 7. 316, 889.
20. தெ. க. 8, 583.
21. தெ. க. 4, 293.
22. தெ. க. 4, 33.
23. A.R.E. 1914. எண். 189.

# மழவராயர் செப்பேடு

அ. அப்துல் மஜீத்,
பதிவு அலுவலர், திருச்சி.

1. உ சுபமஸ்து ஸொஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலெசுபரன் பா
2. தளவிபாடன் பாழைக்குத் தப்புவராத ராயர் கண்டன் கண்ட
3. னுடு கொண்டு கொண்டனுடு கொடாதான் ஆரியர் தள விபாடன் ஆ
4. ரியர் வீரம் அழித்தான் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் கொட்டந்தவிழ்த்
5. தான் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மெலுக்கை யழித்தான் பூறுவ தெட்
6. சண பச்சிம உத்தர சதுறு சாகர கண்டனல்வன் யீட்சுசுற தெற் பீ தெதித்பீ
7. ரொசுரசுத்தொத கசந்த[1] சமுத்திராதிபதி சுவாயம்பூ மனுச் சக்கிறவற்த்தி
8. நிறுமித அகண்ட நவகண்டப் பிறுதிவு மண்டலாதிபதி அங்க வங்க கலி
9. ங்க காஷ்மீர கொங்க ணடங்க குடுத குச்சர மாளுவ துளுவ மாதே காம பொ
10. சமண்டலீகர் திறையளக்க வந்த ரெகுராமன் அரிசுர பஞ்ஜவ பரிசக்கிறவாக
11. மொடு கெசவேட்டையாடும் புசபெல பராக்கிறமன் ஆடுமணி நா வசையா
12. து கட்டி நாடு புரக்கும் நராதிபர் சிங்கம் செரமண்டல ஸ்தாபனு சாரியன் சோ
13. ழமண்டலப் பிறதிஷ்டாபனுசாரியன் பாண்டிமண்டல துரந்த ரீகன் எ
14. ம் மண்டலமுந் திரைகொண்டு ஈழமுந் திறைகொண்டருளிய ராசாதிரா
15. சன் ராசபரமெசுபரன் ராசமாற்தாண்டன் நாற்பத்து முக்கோண மேற் ச
16. க்கிறமாக மாடமாளிகையுங் கூடகோபுரமுங் கோட்டை மதிளுங்

17. குறைவறவமைத்த விசைய நகரத்திலும் வேலுர்தனிலு முத்திறை ப

18. ந்த லச்சுத்தேரெல்லாம் பொலிய ஆஷான மண்டபத் தாறுகாற் பீடத்தே

19. றி யினிதமர்ந்து தேவெந்திரன் ஓலக்கம் போலிருந்து மனு விக்கியா

20. னம்துர்ம² பாராட்டித் திக்கெல்லாம் புகழ்ச் செங்கோல் செலுத்தும் இம

21. ல்லிகாற்சுன தேவமகாராயர் மூ ஸ்ரீ செயரங்கராயர் அவர் களிற்பின் அ

22. ரியலூர்ச் சமஷானம் ஸ்ரீ மழவராய துரையவர்கள் பிறுதிவு ராச்சிய பரி

23. பாலனம் பண்ணியருளாநின்ற சாலிய வாகனச் சகாப்புதம் ஷூ (சூளா௰உ)

24. கலி சகாப்புதம் ஷூ (சுசூஅாகூ௰க) இதின்மேற் செல்லா நின்ற சாதாருண

25. ஷூ வையாசி மீ உ௰௫ உ சுக்குறவாரமும் சப்தமியும் சதைய நஸ்சத்திரமு

26. ம் கூடின இந்த சுபதினத்தில் திருமழபாடிக்கு கிழக்கு கொவிந்தபுதூருக்கு

27. மேற்கு பழுவூருக்குத் தெற்கு திருவையாறு காவேரி கொள் ளடத்து

28. க்கு வடக்கு யிந்த நான்கெல்லைக்குள்ளாய சமஷ தேவராச தானி

29. யாய் விளங்காநின்ற ஸ்ரீ திருமானல்லூர் க்ஷேத்திரத்தில் அகிலாண்

30. டகோடி பிறுமாண்ட ஞயகராய் அரியயன் தேடுதற்கரிய பொருளாய்

31. மான் மழு கல கபாலங் காளகண்டஞ் சதுற்புசம் திரி நெ[த்தி]ர தாரராய்

32. ஸ்ரீ காமாக்ஷியம்பாள் சமீதரா யெழுந்தருளியிருக்கா நின்ற ஸ்ரீ கயிலாச

33. ஞத சுவாமிக்கு அரியலூர் விருதுமத்தர் வலியுடைய துரை சிகாமணி

34. யாகிய ஸ்ரீ விசைய ஒப்பிலாத மழவராயர் குமாரர் ஸ்ரீ குமார ஒப்பி

35. ல்லாத மழவராயர் க்ஷேத்திரியதான[3] சாதனம் பண்ணிக் குடுத்தபடி

36. க்ஷேதிரியதானமாவது மஞ்சமோட்டுக்கு கிழக்கு திருவெங்க ணூருக்கு

37. மெற்கு பாவட்டங்குறிச்சி ஓடைக்குத் தெற்கு கொள்ளிடத் துக்கு வடக்கு

38. யிந்த நான்கெல்லைக்குள்ளாகிய திருமானல்லூர் பிஞ்சை நிலம் திட்

39. டு திடல் மாவடை மரவடை எப்பேர்பட்டதும் பயிர் வெகிமை கிந்

40. திரசிப்பந்தி சாதிலவார் அரசு மானியம் உள்பட க்ஷேத் திரியம் பூ

41. உ ா இந்தப்பூவீ உ ராகன்[4] நூறும் சருக்காருக்கு செலுத்தி வைச்சுக்கெ

42. காண்டு மேல் அதிகம் உண்டாகிய பலனை சுவாமிக்கு அபிஷே

43. க நெய்வேதனம் திருவிளக்கு திருமாலை திருப்பள்ளிக்கி அனுபவித்து

## பின்புறம்

44. க் கொள்ளுகிறது இந்தப்படி சந்திராதி நாள் உள்ள வரைக்கும் கல்லுங்

45. காவேரியும் புல்லும் பூமியு முள்ளவரைக்கும் ஸ்ரீ கயிலாசனுதை சுவ

46. ாமியே க்ஷேத்திரியதானமாய் அனுபவிச்சுக்கிறது யிந்தபடி சம்

47. மதிச்சு ஸ்ரீ குமார ஒப்பில்லாத மழவராயர் பண்ணிக்குடுத்த தற்மத்துக்கு யா

48. தொரு கலனுமில்லை தற்மத்தை மென்மேலும் பரிபாலனம் பண்ணி

49. ன பேர்களுக்கு ஸ்ரீ கயிலாசனாத சுவாமியும் காமாட்சி யம்மனும் அருளு

50. ம் பிறசாதமுங் கொடுத்து ரெக்ஷிப்பர்கள் யிதுக்கு யாதா மொருவர் விறகி

51. த்தி நினைந்தால் ஸ்ரீசுத்தி கோவத்தி பிறும்மத்தி அசுவத்தி சிசுவத்தி கேசவத்தி

52. பண்ணின தோக்ஷத்தை அனுபவிப்பர்கள் ஸ்ரீராமசெயம் உ[5]

—o—

1. ஆறுவது வரியின் இறுதிப் பகுதியும் ஏழாவது வரியின் தொடக்கப் பகுதியும் சரியாக விளங்கவில்லை.

2. விக்கியானம் தர்மம் என்று படிக்கவும்.

3. ஸ்ரோத்திரியதானம்.

4. வராகனாக இருக்கலாம்.

5. இச்செப்புப் பட்டயம் அரியலூர் மழவராய மன்னர் வலிவுடைய துரைசிகாமணியாகிய ஸ்ரீ விசைய ஒப்பிலாத மழவராயர் குமாரர் ஸ்ரீகுமார ஒப்பில்லாத மழவராயர் திருமானல்லூர் ஸ்ரீகாமாக்ஷியம்பாள் சமேதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகயிலாசநாத சுவாமிக்கு ஸ்ரோத்திரியதான சாதனம் எழுதித் தந்ததைக் குறிக்கிறது. இப்பட்டயம் கி.பி. 1790-இல் எழுதப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், திருமானூர் தர்மகர்த்தா திரு. டி. சம்பந்தம் பிள்ளை என்பவரிடமிருந்து இச் செப்புப்பட்டயம் பெறப்பட்டது.

# மாயிலட்டி

நடன. காசிநாதன்
பதிவு அலுவலர், சென்னை.

மாயிலட்டி என்பது சோழர் ஆட்சியில் அந்தப்புரப் பெண்களுக்கு வழங்கிய மரியாதைச் சொல் என்று டி. என். சுப்பிரமண்யம் கூறியுள்ளார்.[1] ஆனால் கல்வெட்டுக்களில் மாயிலட்டி என்ற சொல் ஆளப்படும் இடங்களைக் கவனிக்கையில் அச்சொல் குறிப்பிட்ட ஒரு வகுப்பாருக்கு வழங்கப்பட்ட சொல்லாகவே காணப்படுகிறது. மாயிலட்டி என்பார் சங்கரப்பாடியாரே என்று கருத இடமளிக்கிறது.

சிரேஷ்டி என்ற சமஸ்கிருதச் சொல் சிரேட்டி என்றும், சிலேட்டி என்றும் தமிழில் வழங்கப்பட்டுள்ளது. சிரேஷ்டியே செட்டி என்பதாகும் என்றும் கருதப்பட்டிருக்கிறது. சிரேஷ்டி, சிரேஷ்டன் என்ற சமஸ்கிருதச் சொற்களுக்கு வங்கியர், வியாபாரி, வணிகக் குழுவின் தலைவர், சில காலங்களில் அரசன் ஒரு தானம் அளிக்கும்போது அதைப் பற்றித் தெரியப்படுத்தும் அதிகாரிகளுள் ஒருவர் ஆகிய பொருள்கள் உண்டு என்று டி. சி. சர்க்கார் எழுதியுள்ளார்.[2] வைசியர்களின் பெயர்களைக் குறிப்பிடுகையில் சிரேட்டிகள் அல்லது சிலேட்டிகளைத் தமிழ் நிகண்டுகள் தெரியப்படுத்துகின்றன. சூடாமணி நிகண்டு,

*இளங்கோக்கண் மன்னர் பின்னரிப் பரெட்டியரே நாய்கர்*
*வளம்பெறு வணிகர் நல்லான் காவல ருழவர் மற்றும்*
*விளங்கிய பரதர் மேய வினைஞர் செட்டியார் பன்மென்றும்*
*உளங்கெழு வைசியர் பேராமுறு **சிரேட்டிகளுமாகும்***

என்று குறிப்பிடுகிறது.

சேந்தன் திவாகரமும் **சிரேட்டிகள்** என்றே தெரிவிக்கிறது. ஆனால் கயாதரம் **செலேட்டிகள்** என்று குறிப்பிடுகிறது. அதே போன்று ஆசிரிய நிகண்டும்,[3]

*மன்னர்பின் னவரிளங் கோக்க ளெட்டியரிப்பர்*
*வைசியர்கள் விப்பர் நதர்*
*வரு**சிலேட்டிகள்** பசுக் காவலர் விருச்சிகர்*
*வணிகர் முத்தொழில் நாயகர்*
*உன்னியர் விலைஞரே செட்டிகள் பொதுப்பெயர்*

என்று செட்டிகளின் பொதுப் பெயர்களில் சிலேட்டிகளைத் தந்துள்ளது. செட்டிகளில் சிலேட்டிகள் என்ற ஒரு வகை செட்டிகள் இருந்தனர் என்பது மேற்கூறப்பெற்ற செய்திகளின் மூலம் உணரமுடிகிறது.

சிலேட்டிகளில் செல்வாக்குப் பெற்றோரை மாசிலேட்டிகள் என்று அழைத்திருப்பர். அச்சொல்லே மாயிலட்டி என்று வழங்கி வந்துள்ளதுபோலும். மகேந்திரவர்மன் என்னும் சொல் மசிந்திரவர்மன் என்றும் மயீந்திரவர்மன் என்றும் எழுதப்பட்டிருப்பதைக் கல்வெட்டுகளில் காணலாம்.[4]

மாயிலட்டிகள் தங்களைச் சங்கரப்பாடியார் என்றே குறிப்பிடுகின்றனர். சங்கரப்பாடியார் என்பார் எண்ணை வாணிபம் செய்யும் வாணியர் என்பது பிறிதொரு கட்டுரையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.[5] ஆதலின் இம்மாயிலட்டிகளும் தொடக்கக் காலத்தில் எண்ணெய் வாணிபம் செய்பவர்களாகவே இருந்திருக்கவேண்டும் என்று உறுதியாகக் கூறலாம்.

"வாணியர் என்பார் எள், நிலக்கடலை முதலியன செக்கிலாட்டி எண்ணெய் எடுத்துச் சீவிப்போர். இவர்கள் தங்களை வைசியர் என்பர். இவர்கள் இடங்கையவர். மதுரை, திருநெல்வேலிப் பக்கங்களில் கோவிலுக்குள் போகக் கூடாது. இவர்கள் பூணூல் தரிப்பர். இவர்கள் **சோதி நகரத்தார்** என்று தங்களைப் புகழ்வர். இவர்கள் வீட்டில் வண்ணான் சாப்பிடான். இவர்களில் ஒற்றைச் செக்கான், இரட்டைச் செக்கான் என இரண்டு வகை உண்டு. இவர்கள் தங்களுக்குச் செட்டி என்பது பட்டமாகக் கொள்வர்." என்று அபிதான சிந்தாமணியில் காணப்படுகிறது.[6] இதன்படி பார்க்கையில் சமுதாயத்தில் அவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் வைத்து மதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை உணர முடிகிறது. ஆனால் சோழர் பாண்டியர் காலங்களில் அவர்கள் நல்ல உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்திருக்கிறார்கள் என்பதைக் கல்வெட்டுகளில் காணலாம்.

சோழ மன்னன் முதலாம் பராந்தகன் காலத்தில் திருமணஞ்சேரி பரமசுவாமிக்கு **சோழிய வாணியரான** முண்டரங்கநாகிய திருமணஞ்சேரி நாற்பத்தெண்ணாயிர **பன்மாயேஸ்வர மாயிலட்டியார்** பலித்தாலம் ஒன்று; தூங்கு விளக்கு ஒன்று, எறிமணி ஒன்று, திருவடிநிலை இரண்டு, ஸ்ரீபலி எழுந்தருளும் திருமேனி ஆகியவைகளைக் கொடையாக அளித்திருக்கிறார். தஞ்சை மாவட்டம் திருமணஞ்சேரியிலுள்ள உத்வாஹநாதஸ்வாமி கோயில் கல்வெட்டு இதைத் தெரிவிக்கிறது.[7] இங்கு குறிக்கப் பெறும் முண்டன் அரங்கன் என்னும் நாற்பத்தெண்ணாயிர மாயிலட்டி சோழிய வாணியன் என்று தெளிவாகக் குறிக்கப்படுகிறான். தற்காலத்தில் கூட எண்ணை ஆட்டி விற்பனை செய்பவர்கள் வாணியர் என்று கூறப்படுவதை நாம் காண்கிறோம். இச்சோழிய வாணியர் கோயிலில் திருமேனி செய்து அளிக்கின்ற அளவுக்குப் பொருளாதாரத் துறையில் மேம்பட்டு விளங்கியிருக்கிறார் என்பது கண்கூடு.

வீரபாண்டியன் தலை கொண்ட பார்த்திவேந்ராதிபதிபன்மர் காலத்தில் காஞ்சிபுரத்து இரணவீரப்பாடியைச் சேர்ந்த **சந்திரன் எழுநூற்றுவன் நுளம்ப மாயிலட்டியாரிடமிருந்து** பூர்வசாரத்தைப் பெற்றுக்கொண்டு உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி ஸபையார் தம்மூர் பெரிய மண்டபத்துப் பெருமானடிகளை அர்ச்சிக்கும் ஆத்ரயன் தத்தபட்டனுக்கு சில நிலங்களுக்கான வரிகளை நீக்கி அர்ச்சநாபோகத்துக்கும், திருவமுதுக்கும், திருவிளக்குக்குமாகத் தந்திருக்கின்றனர்.[8] இம்மாயிலட்டி, வியாபாரி என்று

அழைக்கப்படுகிறான். இவனும் பொருளாதார மேம்பாடுடையவனாகத் திகழ்ந்திருக்கிறான்.

அதே போன்று முதலாம் இராஜராஜன் காலத்தில் அவனது அதிகாரிகளுள் ஒருவனாக **சங்கரப் பாடியான் கண்ணன் கீரனான குன்றை மாயிலட்டி** இருந்திருக்கிறான்.[9] இம்மாயிலட்டி சங்கரப்பாடியான் என்றே குறிக்கப்படுவது கருத்திற் கொள்ளத் தக்கது. மேலும் இவன் நகரத்தாருள் ஒருவனாகக் குறிக்கப்படுகிறான். அவ்வாறெனில் இவன் சிறந்த வணிகனாக விளங்கி உயர்நிலையில் வைத்து மதிக்கப்பட்டவனாக இருந்திருப்பான் என்பதில் ஐயமில்லை.

மற்றொரு மாயிலட்டி ஆயிரம் குழி நிலம் பெற்றுக் கொண்டு ஈஸ்வர முடைய தேவற்கு ஒவ்வொரு நாளும் உழக்கு நெய் அளித்து வந்திருக்கிறான். இவன் பெயர் **சங்கரப் பாடியான் கண்டன் மறவனான சோழேந்திர சிங்க மாயிலட்டி**[10]. இவனும் சங்கரப் பாடியான் என்று குறிக்கப்படுகிறான். இவன் விளக்குக்கு நெய் அளிக்கும் தொழிலைப் புரிந்திருக்கிறான். கோயில்களில் விளக்குகளுக்கு எண்ணெய் அளிப்பதைத் தான் தொடக்கக் காலத்தில் சங்கரப் பாடியார்கள் மேற்கொண்டிருந்தனர். ஆதலால்தான் பிற்காலத்தில் எண்ணெய் ஆட்டுபவர்களுக்குச் **சோதி நகரத்தார்** என்ற பெயர் ஏற்பட்டது போலும். சோழர்கள் காலத்திலும் மாயிலட்டிகளைச் **சோதி மாயிலட்டி** என்று அழைக்கும் மரபு இருந்திருக்கிறது.

இதே போன்று மாயிலட்டியான மற்றொருவன் முதலாம் இராஜராஜன் காலத்தில் இராஜராஜனின் தமக்கையான குந்தவை ஆழ்வாரின் கரணத்தானாக இருந்திருக்கிறான்.[11] இவனது பெயர் **மருதங்குடையான் மாயிலட்டி** என்பதாகும்.

முதலாம் இராஜேந்திரனின் காலத்தில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பெரும்பாணப்பாடி ஆற்றூர் நாட்டு சோழபுரத்தில் **தாழி சூற்றியாந கரிகால சோழ மாயிலட்டியும், நடையாடி பழங்காடனான தேவர்கள் சோதி மாயிலட்டியும்**[12] வியாபாரிகளாக விளங்கியிருக்கின்றனர். இவர்களோடு இன்னும் சில வியாபாரிகள் குறிக்கப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் செட்டிகளாக இருக்க, இவர்கள் மட்டும் மாயிலட்டிகள் என்று அழைக்கப்படுகின்றனர். மாயிலட்டிகள் சாதாரண செட்டிகளினின்றும் வேறானவர்கள் என்பதை இதன் மூலம் உணரலாம். இம்மன்னன் காலத்திலேயே ஒரு மாயிலட்டி ஸ்ரீகார்யமாகத் தொழில் புரிந்திருக்கிறான். அவன் இத்தேவற்கு ஸ்ரீகாரியம் பார்க்கின்ற **தாநதொங்கனான கடாரங் கொண்ட சோழ மாயிலட்டி** என்று குறிக்கப்படுகிறான்.[13]

முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் திருவையாறில் அதிகாரிகள் மற்றும் சில பணி புரிவார் கண்காணிப்பில், திருவையாற்று ஒலோகமாதேவி ஈஸ்வர முடையார்க்கு விஷ்ணுவர்த்தன தேவர் தந்தருளிய ராஜராஜன் மாடை முன்னூறினால் பல்வித ஆபரணங்கள் செய்து அளிக்கப்பட்டிருக்கின்றது. கண்காணிப்பாளர்களில் ஒருவனாக **வண்ணக்கு சாத்தன் ஸின்றானான வீரசோழ அணுக்க மாயிலட்டி** குறிக்கப்படுகிறான்.[14]

இவன் வண்ணக்கு என்பதால் ஓவியத் தொழில் புரிபவனாக இருந்திருக்கலாமோ என்று எண்ணவேண்டியுள்ளது. அவன் மாயிலட்டியாக இருந்தபோதிலும் தம் குலத் தொழிலைவிட்டு ஓவியத் தொழிலில் திறமைசாலியாக இருந்திருக்கிறான் போலும்.

முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் மாயிலட்டியான ஒருவன் நிலக்கொடை அளித்திருக்கிற செய்தியையும் காண முடிகிறது. வடகரை ஜயதரபுரத்திருக்கும் **சங்கரப்பாடியான் படியசோலை அரைசான குலோத்துங்க சோழ மாயிலட்டி** பாண்டிகுலாசனி வளநாட்டு ஆற்காட்டுக் கூற்றத்துப் பிரமதேயம் சந்திரலேகைச் சருப்பேதிமங்கலத்துத் திருப்பெருந் துறை உடைய மகாதேவர்க்குச் சனி தோறும் எண்ணெய்க் காப்பு சாத்தி அருளவும் அமுது செய்தருளவும் நிலக்கொடை அளித்த செய்தியைச் செந்தலைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[15] இதில் காணப்பெறுபவனும் சங்கரப்பாடியான் என்று தெளிவுபடக் கூறப்பட்டுள்ளான். இவன் மாயிலட்டியாக இருந்தாலும் நிலத்துக்குச் சொந்தக்காரனாக விளங்கியமையாலேயே நிலத்தைக் கொடையாக அளிக்க முடிந்திருக்கிறது.

இதே மன்னன் காலத்தில் இருந்த மற்றொரு மாயிலட்டி மூவேந்த வேளான் என்று அழைக்கப்பட்டுள்ளான். அவன் விருதராஜ பயங்கர வள நாட்டு மேற்கா நாட்டு திருமாணிகுழி மஹாதேவற்கு திருநுந்தா விளக்கு அளித்திருக்கிறான். அவனது முழுப்பெயர் **மாயிலட்டி சேந்தனான அபிமாந சோழ மூவேந்த வேளாந்** என்று காணப்படுகிறது.[16] இங்கு ஒன்றைக் கவனித்தல் வேண்டும். சங்கரப்பாடியானான மாயிலட்டி என்று வழங்கி வந்த வழக்கு மாறி மாயிலட்டியான மூவேந்த வேளான் என்று காணப்படுகிறது. ஆகவே மாயிலட்டியான வியாபாரி, மூவேந்த வேளானான நில உடைமை யாளனாக மாறியிருக்கிறான்.

சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன் காலத்தில் கல்லிடைக் குறிச்சியைச் சேர்ந்த சங்கரப் பாடியார் மூவர் மலைமண்டலத்து காமன் திருவரங்கன் என்னும் நாவல்லறை நாயர் என்பாரிடம் ஒரு ஆனை அச்சு பெற்றுக் கொண்டு நிலையுடைய பாண்டீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் சனிக்கிழமைதோறும் இறைவனுக்கு எண்ணெய்க் காப்பு சாத்துவதற்கு ஒவ் வொரு மாதமும் 5 உழக்கு எண்ணெய் அளிப்பதாக ஒப்புக்கொண்டிருக் கின்றர்.[17] மூவரில் ஒருவன் பெயர் **விளரிதிருவனான ஈகர மாயிலட்டி** என்று காணப்படுகிறது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலும் கோயில்களுக்கு எண்ணெய் அளிக்கும் வழக்கத்தைத் தமிழகத்தின் தென்பகுதியில், பாண்டி நாட்டில் சங்கரப்பாடியானான மாயிலட்டி கொண்டிருந்தான் என்பதை இதன் மூலம் உணரலாம்.

இதே போன்று கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் கன்னட நாட்டுப் பகுதிகளில் செட்டிகளும், **மாயலசெட்டிகளும்** இருந்ததை அங்குள்ள கல்வெட்டு ஒன்று புலப்படுத்துகிறது[18]. மேலும் ஈழ நாட்டில் காணப்பெறும் இடப் பெயர் **களில் மயிலிட்டி, மாகியயிட்டி** என்று சில பெயர்கள் இருப்பதாக தெரிய

வருகிறது. இப்பெயர்கள் சாதி, சமூகப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டவை எனக் கருதப்படுகிறது.[19] அவ்வாறெனில் மயிலிட்டி, மாகியபிட்டி ஆகிய இரு பெயர்களும் மாயிலட்டி என்ற சமூகத்தினரின் பெயராக இருக்கலாம்.

---

1 தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 3, பகுதி 2, பக்கம் 1477
2 Indian Epigraphical Glossary, Page. 317.
3 வீ. சொக்கலிங்கம், ஆசிரிய நிகண்டு, சரஸ்வதி மஹால் நூல் நிலைய வெளியீடு.
4 டாக்டர் ஆர். நாகசாமி, செங்கம் நடுகற்கள்.
5 நடன. காசிநாதன், 'சங்கரப்பாடியார்' கல்வெட்டு இதழ் எண். 18
6 ஆறுமுக முதலியார், அபிதான சிந்தாமணி, பக்கம். 1405 (வெளியீடு—1934)
7 S. I. I. Vol. XIX, No. 99.
8 S. I. I. Vol. III, No. 170.
9 S. I. I. Vol. XVII, No. 313.
10 S. I. I. Vol. III, No. 19
11 S. I. I. Vol. V, No. 1409
12 S. I. I. Vol. XVII, No. 326
13 S. I. I. Vol. VI, No. 33
14 S. I. I. Vol. V, No. 520
15 S. I. I. Vol. VI, No. 9
16 S. I. I. Vol. VII, No. 779
17 S. I. I. Vol. XXIII, No. 96
18 Epi. Carnatica, Vol. III, No. 394
19 சி. க. இராசேசுவரன், 'ஈழநாட்டு இடப்பெயர்களில் தமிழின் ஆளுமை, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், பக்கம். 225

★

# A Historical and Literary Study of the Sanskrit and Tamil Inscriptional Eulogies of Tamilnadu during the Pallava and Cola periods.

**V. SIVASAMY**
Lecturer and Head,
Department of Sanskrit, University of Jaffna,
Sri Lanka.

Tamialnāḍu occupies a unique place in the history of South Asian Epigrahy, as it has not only the largest number of inscriptions but also some of the longest inscriptions during the various epochs of history ranging from the third century B. C. to the Seventeenth Century A. D. The bulk of these inscriptions were inscribed from about the Sixth Century A. D. to the Fourteenth Century A. D. This period coincides with the age of the Pallavas of the line of Simhavishnu, the Pandyas and the Colas. These inscriptions were written in Tamil or Sanskrit or in both languages. But it is a great pity that many of these inscriptions which are a mine of information for the history as well as the literary activities of Tamilnāḍu are not yet published. These were inscribed by the kings and others for various purposes religious and secular.

Among these inscriptions, there were two distinct literary genres peculiar to Indian epigraphy. These are of considerable importance from historical and literary points of view. These are the Praśastis and the Meykkirttis. The first type was written to a large extent in Sanskrit and to a small extent in Tamil; the second was written only in Tamil. These two are interrelated and have many common features in their form and content. The first type is found all over South Asia, whereas, the Second one is found only in Tamilnāḍu. Thus the first one has an all Indian character, whereas, the second one is peculiar to Tamilnāḍu. Thus both these forms reflect in a way the two significant facts of South Asian culture, namely the all pervasive common tradition and the particular regional genius or tradition.

Indian epigraphists especially the specialists in the epigraphy of Tamilnāḍu like T. V. Sadasivapandarattar, M. Raghava Iyyankār, V. Suntaresavandaiyar and A. Veluppllai have analysed some aspects of the Meykkīrttis. But there has been hardly any serious study of the Sanskrit prasastis of Tamilādu. A study has already been done on the important Sanskrit Prasastis of the early times especially of the Gupta period. Some articles on the Prasaśtis and Meykkirttis of Tamilnāḍu have been published recently. In this article, it is proposed to point out briefly the importance of these forms from the historical and literary points of view and reiterate the need for further detailed

study of these literary genres. A comparative study of these forms will be fruitful. Besides many other things, these will clearly show that the indigenous rulers of Tamilnāḍu while fostering their regional culture and mother tongue did not keep away from the main stream of Indian Culture.

## Origin and development of Prasastis and Meykkirttis

The origin of the Praśasti form will be discussed first, as it is the earlier of the two forms. The word Praśasti has a variety of meanings conveyed by it from Vedic times:- "praise, fame, eulogy, panegyric, small poem written in praise of anyone, description, laudation, value, liking, instruction, guidance, benediction and written edict". The words kīrtti, kīrttana and kīrttanā were used in the sense of praśasti. Pathak thinks that certain inscriptions are called Pūrva (past history) because they contain the royal genealogy.

An inscriptional Praśasti may be defined as 'a form of literary composition on stone or metal, which usually describes a king in a special manner (in an ornate literary style, as in the standard kavyas, caritas etc.) with reference to his genealogy, titles, fame, conquests, administrative measures, patronage of religion and culture, qualities, talents and other accomplishments worthy of praise and emulation......

The origin of this type of eulogy may be traced back to literary and epigraphic sources. One may refer to the eulogistic trais found in the hymns of the Rgveda, the gāthas and nārāśamsīs (praises of men found in the later Vedic literature) and the epics. As for the epigraphical antecedents, one may especially refer to the Hāthigumphā inscription of Khāravela and the Nāsik cave inscription of the time of Vasisthiputra Puḷumāvi. These records are in Prakrit and are highly eulogistic. Inscriptions with all the features of Sanskrit praśasti are found from the time of the Girnar Inscription of Rudradāman (150 A. D.). Following this record, one notices a series of praśastis during the age of the Imperial Guptas. The Allahabad stone pillar inscription of the Gupta king Samudragupta is a typical praśasti. In some of the inscriptional eulogies written a little later, the word praśasti itself occurs to denote this type of composition. One may, for example,cite the Aihole inscription of Pulakesin II where the word parśasti is found at the end. This word is found in some of his small inscriptions too. From about this time onwards, the word praśasti is found in such inscription in the North as well as in the South. In Tamilnāḍu this word occurs not only in Sanskrit but in Tamil also, as in the inscriptions of the Pandyas (about 8-9th C. A. D.). From this evidence it might be suggested that this type of composition had attained a specific form and content by this time or before, in Tamilnāḍu as well.

Bilingual inscriptions in Tamil and Sanskrit were issued in Tamilnāḍu from about the 7th century A.D. The word praśasti was used not only in the Sanskrit portion but also in the Tamil portion of the particular inscription. One may for example, cite the Vēlurpālayam Copper Plates or the Udayendiram

Copper Plates of the Pallava king Nandivarman[10] (9th century). In the former inscription[11] the word 'ippiraśasti' meaning 'this eulogy' is formed at the concluding portion. The same tendancy is formed in the contemporary Pandya eulogies. Taking the inscriptions of both the Pallava and their Pandya contemporaries[12] in Tamilnāḍu, one may notice that in some inscriptions there are two eulogies, one in Sanskrit and another in Tamil and in some the eulogy proper is written in Sanskrit while the donation of the king and such other details are written in Tamil. Further in some inscriptions the Tamil eulogy contains more[13] historical matter than the Sanskrit eulogy. There is more legendary material in the Sanskrit than in the Tamil eulogy. It is interesting to note as pointed out earlier, both the[14] Tamil and the Sanskrit portions are called praśasti at the end of the record. It might be reasonably assumed that the Sanskrit praśasti might have been based on the Sanskrit inscriptional praśasties and the Sanskrit literary tradition and the Pandya historical tradition. The Tamil praśasti in addition to all these, would have had the Tamil literary tradition as well. Following the praśasti of the Pallavas and Pandyas, longer and more important praśastis were issued by the Colas of the line of Vijayalaya. Their Sanskrit eulogies were of considerable length. Among these, one may for example cite the Anbil plates of Sundara Cola,[15] the larger Leiden Plates of Rājarāja I, the Tiruvalankāḍu Copper plates of Rājendra I, and the Kanyākumari[16] inscription of Vīrarājendra. All these run[17] to more than 100 lines. They are like small kāvyas[18] on the particular kings and their family. They can be called Colavamśapraśastis or Colavamśakāvyas. But in the Tamil inscriptions, the praśasti form is not found but instead almost a similar but quite distinct literary form is found from the time of Rājarāja I. This is the Meykkīrti.

As some scholars already referred to have done some important work on the Meykkīrtis, it is proposed to deal with them briefly. Meykkīrti means 'true fame'. The great Tamil savant M. Raghava Iyyankār interpreted this to mean 'as having the body of fame' (of the particular person). As a literary form, this is found in medieval Tamil epigraphy from the time of Rājarāja I (985-1018) to the 16th century A.D. Some medieval grammatical works like the Pannirup-pāṭṭiyal, the Vaccanantimālai and the Ilakkaṇavilakkappāṭṭiyal have defined[19] both Meykkīrti[20] and Meykkīrtimālai. Taken together[21], these meant a particular form of eulogy especially on the king. But the extent Meykkīrtis do not completely conform to the definitions as set forth in the above works. Further, more significant is the fact that the early Meykkirtis of Rājarāja I; and his successors are earlier than the works cited above. Usually, literature precedes grammar. Therefore, it is logical to presume that these early Meykkīrtis themselves had some antecedents. Further, the Meykkīrtis of Rājarāja I are in full form, thereby showing some developments prior to his time.

Ever since the dawn of civilization or perhaps even before, there has been a tendency in man to praise himself or more particularly to be praised by others. The ruling and the more affluent classes liked eulogies. For this purpose as time went on, the rulers employed poets and others in their courts and patronized them. Enjoying the state patronage, the poets too eulogized their patrons on

specific occasions, as after a victorious campaign. The patrons gave away land, cash or kind to the poets who praised them. Such a trend was noticeable in in Tamilnāḍu also from the age of the Sangam onwards for a long time.

The earliest stratum of Tamil literature collectively known as the Eṭṭuttokai and Pattuppaṭṭu contain a lot of references regarding this subject. The poems dealing with "puram" are full of this. If one goes through carefully the early literary and grammatical tradition of the Tamils, he will not fail to notice the importance of Pāṭāntiṇai in the origin of the Meykkīrtis. Many a king and chieftain had been aspiring for fame in this life and the next. This great aspiration for fame especially in war had inspired many a poet who have given vent to their feelings in such poems eulogizing their patrons. This aspiration for fame is quite typical of the Heroic Age as eloquently and explicitly illustrated by Dr. K. Kailasapathy.[22]

One of the poets says that the warriors were prepared to lay down even their precious life for fame (புகழெனினுயிருங் கொடுக்குவர் புறம். 182). The patikams in the Patiṟṟuppattu might have been another precursor to the Meykkīrti. One sure and effective way of establishing one's fame in this world was to be praised by the poets in their immortal poems. Thus some such poems from the Sangam classics, the Silappatikāram and other later works and the Sanskrit praśastis might have contributed in no small measure to the evolution of the Tamil praśastis which in turn would have led to the origin of the Meykkīrtis.

At this juncture, a comparison may be made of the salient features of the Praśastis and Meykkīrtis. As typical examples of both types of eulogies, one may cite the Velvikkuḍi Copper Plates of Neḍuñjadaiyān containing Tamil and Sanskrit praśastis and the Larger Leiden[23] Plates and one of the Meykkīrtis of Rājarāja I. Both types of eulogies[24] panegyrize the particular king. But the praśasti eulogies not only the contemporary king but also his ancestors. The Meykkīrti praises only the contemporary king. The panegyrical tendency is common to both. The praśasti generally begins with an invocation to a particular deity or an auspicious word or symbol. The Meykkīrti begins with an auspicious phrase compares which varies from one ruler to another. In other words, the Meykkīrti bears a distinct stamp by having a particular phrase belonging to a particular ruler. In this way, it is always possible to identify the ruler eulogized in the Meykkīrti at once, from the opening phrase itself. For example, the Meykkīrtis of Rājarāja I always begin with "திருமகள்போலப் பெருநிலச் செல்வியும்". Meykkīrtis are generally written in the Akaval metre. The praśasti whether it is in Tamil or Sanskrit generally mentions the name of the composer. But the Meykkīrti does not mention the name of the poet at all.

**Historical Aspects**

The praśastis and the Meykkīrtis were composed by poets who were patronized by kings or others of high rank and affluence. As it is clear from the very

name of these two forms, they are eulogies. Yet, they are not mere eulogies. This is borne out by internal evidence as well as external sources. They generally have a historical kernol as their very basis. It is true that they praise their patrons with the highest encomium. But the achievements of the kings and their qualities have some historical basis which is of vital importance to the historian of Tamilnāḍu where the sources of history are limited. It might be that the composers of these literary forms, especially the Meykkīrtis were quite aware of the historical facts and so wanted to differentiate their compositions by referring to them as 'Meykkīrtis' (compositions of true fame) in contrast to Poykkīrtis (empty boasts) which have no historical foundations whatsoever.

The composers of these eulogies usually knew their patron kings personally They have of course described their partrons with their literary imagination. The personal knowledge and intimacy of the king and the poet may not be doubted. The poet was a witness to the events that he had described inspite of the natural eulogistic traits found in his composition. Thus, whatever the evidence, it is of great value to a historian. Some of the composers of praśastis like the Velvikkudi copper plates were officials of high rank. The composer of this Tamiḷ praśasti Enādi Sāttan was a commander-in-chief of the forces. In the case of the Sanskrit praśastis which usually describe not only the contemporary king but his ancestors, the poet might have sometimes witnessed the events of the immediate predecessors of his patron. He might have used the oral or the literary tradition or the archives if kept in the courts regarding the ancestors of his patron. He might have utilized two of these or all the sources to write his composition.

The genealogical lists and the documents regarding the exploits of the kings seem to have been kept in the various states in ancient India North and South. The Purānas constitute an important illustration of this fact. The history of the rulers of the Kali Era is one of the fivefold characteristics (Pañcalaksanas) of the Purānas. The Arthaśastra,[36] the Yājñavalkya Smrti[37] and other works refer to the preservation of Vamsāvalis (genealogical lists) of kings. The evidence of the Chinees traveller Hiuen Tsang who visited India in the seventh century A.D. is quite interetin. He says "with regard to the records of events, each province has its own official for preserving them in writting. The records of the events in their full character is called Ni-lo-pi cha (Nilapita-blue doposit). In these records are mentioned good and evil events with calamities and fortunate occurrences". Tamilnāḍu is one of the regions in India where historical[38] traditions were preserved atleast in some way for a long time. Except Kahmir and a few outlying areas, Tamilnāḍu has preserved a good amount of the royal genealogical lists of the three crowned kings of the Cera, the Cola and the Pandya dynastics especially the last two. A good number of the names of the Pandya and the Cola kings are known from the praśastis under review.[39] One may cite for example, the Kanyākumari inscription of Virarajendra which describes the history of the Colas from the time of the Sangam Age if/not earlier, to the time of this ruler (11th countrv). Of course the legendary material in this and other praśatis can be easily set aside.

It is ture that both these literary forms have considerable bias and exaggeration as the composers were dependent on their patrons when they have eulogized. Yet they need not be mere eulogies. Another defect in both is that they have a literary aspect. They were composed by poets who had described the patrons with their poetic imagination. Thus, they might not necessarily state the facts as they were. Inspite of these defects, their historicity cannot be gainsaid. The evidence from these could be confirmed and corroborated by other contemporary sources of information in some way or other. Some of these praśatis mention the names of the writer and the engraver also. Dr. J. F. Fleet had doubted the historical sense of the Indians but Dr. C. Sircar has accepted this criticism partially. He has[30] stressed the importance of the inscriptions as a source[31] of history especially in the absence of any other reliable sources. Prof. K. Nilakanta Sastri had said that 'Epigraphy and numismatics[32] are perhaps the most precise and trustworthy sources of history everywhere and particularly in India where indigeneous literary sources are very defective". Prof. Romila Thapar has recently emphasized the historical[33] sense in ancient India after refuting the fallacy that the Indians had no historical sense at all.[34]

**Literary Aspects**

These eulogies are of equal importance to the literary history of Tamil and Sanskrit. Both forms though written in two different language share a common literary tradition, namely, the Kāvyatraditien. They are written in an ornate literary style mostly in verse. One may cite for example the Velvikkudi copper-plates or the Larger Sinnamanur plates or the Larger Leiden plates and a Meykkīrtti of Rājarāja I. These two literary forms have a litery merit of their own. Their scope and extent were limited probably due to the lack of space on the stone or copper-plate on which they were written. Here and there, one finds good specimens of poetry in Tamil and Sanskrit. The Tamil praśastis of the PallavaPandya period and the Meykkīrttis to the Cola period could favourably and profitably be compared with the contemporary Tamil court poems like the Pāntikkovai the Nandikkalambakam, the Kalingattuparani and the Mūvarulā. Further, thus could also be compared with some portions of the Sangam classics. The panegyrical trait is very marked in these epigraphic and the literary forms. Unfortunately, there is hardly any contemporary work with which the Sanskrit praśasti could be compared.

The names of some Sanskrit poets and Tamil poets are known from these praśastis in both languages. One may cite for example Senapati Enadi Sittan the author of the Velvikkudi Tamil praśasti or the Pāndi Mārāyapperumkollan the composer of the praśasti found in the Talavāypuram copper plates of Parantaka Vīranārāyana.[35] The names of some other poets are known from the other Pandya and the Pallava praśastis.

The Tamil praśastis remind us of some of the "puram" poems of the Sangam Age. The Tamil praśastis found in the Talavaipuram copper plates

begins with the phrase "ஓங்கு திரைவியன்பரப்பில்". This phrase already occurs in the very first line of the Maturaikkānci. The composer of the Tamil praśastis in all probability were conversant with the Tamil litarary tradition as well as the Sanskrit literary tradition. Besides the Kāvya tendencies, there are Sanskrit words and phrases in these praśastis. Both the Tamil praśastis and the Meykkīrtis were written in[36] a chaste style.

The Sanskrit praśastis also mention the names of poets who are not known from other sources. One may cite the name of Varodayabhaṭṭa the author of the Sanskrit praśasti found in the Velvikkuḍi copper plates or Paramesvarakkavi composer of the praśasti found in the Udayendiram copper plates. The Cola parśastis too generally refer to the poets who composed them. These Sanskrit poets have used a variety of metres as in an ornate kāvya. For example, the praśasti in the Larger Sinnamanur plates is written in as many as 12 metres in a composition of 38 verses. The Cola praśastis too were written[37] in a variety of metres. These Sanskrit praśastis have śabdālankāras and arthālankāras as in a kāvya.

Taken together the Tamil and the Sanskrit praśastis and Meykkīrtis are like "mini" kāvyas on stones and copper plates and are of equal importance to the history and literature of Tamilnāḍu. They have to be studied and analysed thoroughly. Thus a comprehensive study of the inscriptional eulogies of the Pallava - Pandya and the Cola periods of Tamilnāḍu from the historical and literary points of view will contribute to a better understanding of the history and culture of those times.

FOOT-NOTES

1. Sivasamy, V. *A Study of Sanskrit Inscriptional* prasastis up to the end of the Fifth Century A. D. Unpublished M. A. dissertation, University of Ceylon, Peradeniya, 1969
2. Aarachi (*A Quarterly Journal of Social Studies*, Tirunelvely, India)
   Vol. IV. 4. 1974 pp. 307 - 312
   Vol. V. 1. 1975 pp. 1 - 9
   Vol. V. 4. 1977 pp. 216 - 222
3. Sivasamy, V. Op. cit. p. 3
4. Sircar, D. C. *Indian Epigraphy*, Delhi, 1965, p. 3
5. Pathak, V. S. *The Ancient Historians* of India, London, 1966, p. 20

6. Sivasamy, V. Op. cit. p.6
7. C. I. I. III pp. 6-17
8. E. I. VI. pp. 1 ff
9. E. I. V. pp. 6 - 9
10. S. I. I. II V. pp. 502 - 513
11. S. I. I. II III pp. 361 - 367
12. *Ten Pandya Copper Plates*, Madras, 1967, pp. 19 ff
13. Ibid. pp. 55 - 70
14. Ibid. pp. 1 - 48
15. E. I. XV. pp. 44 - 72
16. Ibid. XXII. pp. 213 - 266
17. S. I. I. III. III. pp. 383 - 439
18. E. I. XVIII. pp. 211 - 255
19. *பன்னிருபாட்டியல் திரு. கா. ர. கோவிந்தராசர் உரையுடன்.*
    *சென்னை. 1970, ப.121*
20. *மேற்படி ப. 121*
21. *மேற்படி*
22. Kailasapathy, K. *Tamil Heroic Poetry*, OUP, 1968
23. *Ten Tamil Copper Plates. pp.* 1 - 48
24. E. I. XXII. pp. 213 - 266
25. *சுந்தரேசவாண்டையார். வை முப்பது கல்வெட்டுக்கள், சென்னை 1967 ப.36*
26. *Arthasatra of Kautilya* (Tr.) R. Shama Sastri, Mysore, 1980, pp. 61 - 62
27. Yajnavalkya Smrti III. 318 - 320
28. Beal, S. (Tr.) Travels of Hiouen Tsang, Vols, I - II
    Calcutta, 1957 - 58, p. 135
29. Sivasamy, V. Some aspects of the Historical Tradition of India with special reference to Tamilnad, A paper submitted for the IVth IATR Conference, Jaffna 1974
30. Sircar, D. C. *Indian* Epigraphy. Delhi, 1965
31. " Ibid. p. 14
32. " Ibid. p. 17
33. Nilakanta Sastri, K. A. *Sources of Indian History*, Madras, 1964 p. 23
34. Romila Thapar, *Bias in History* (Tamil Translation, Madras 1972, p.8.)
35. *Ten Tamil Inscriptions* p. 115
36. I. Ibid, 140 - 176
    II. S. I. I. IV. pp. 450 ff
37. Ibid.

★

# சின்னக் கோயில் - தரங்கம்பாடி

இராமச்சந்திரன்,
காப்பாளர், தரங்கம்பாடி.

தரங்கம்பாடி அஞ்சல் நிலையத் தெருவில் சின்னக்கோயில் என அழைக்கப்படும் சிவன்கோயில் ஒன்று உள்ளது. பொறையாறு கும்பினித்தோட்டம் நாடார்களின் பொறுப்பிலுள்ள இக்கோயில், வருமானமுள்ள கோயிலாதலால் இந்துசமய அறநிலையத்துறையினரின் கண்காணிப்பும் இக்கோயிலுக்கு உள்ளது. கோயிலின் மூலஸ்தானம் முகமண்டபம் முதலியன இடிபாடுகளாக உள்ளன. கோயிலின் சிலைகளெல்லாம் திருச்சுற்றில் வைக்கப்பட்டு அவற்றுக்கு வழிபாடு நடைபெற்று வருகிறது; கோயிலுள்ள விநாயகர் சிந்தாதிரி விநாயகர் எனப்படுகிறார். இத்தொடர் சிந்து யாத்திரை விநாயகர் - என்பதன் திரிபாகும் (சிந்து - கடல்). கடல் பயணம் மேற்கொள்வோர் இவ் விநாயகரைத் தொழுது செல்வது முன்னர் நிலவிய வழக்கம் என்றும், வழி திறந்த விநாயகர் என்றும் அழைக்கப்படுவதுண்டென்றும் கூறப்படுகிறது. தரங்கம்பாடிக்குத் தென்மேற்கிலுள்ள கழுவன் திட்டைக்கருகில் சிந்தாதிரிப்பேட்டை என்ற இடம் உள்ளது. இவ்விடம் தற்போது உப்புத் துறையின் நிர்வாகத்திலுள்ளது.

சின்னக்கோயிலின் கட்டட அமைப்பு செங்கற்களால் அமைந்தது. நாயக்கர் பாணியைச் சேர்ந்தது. கோயிலின் மூலவர் மணிவர்ணேஸ்வரர் என அழைக்கப்படும் மரபு உண்டென்று கோயிலில் வழிபாடு நிகழ்த்தும் திரு. பிச்சைக்குருக்கள் தெரிவித்தார். தரங்கம்பாடி கடற்கரையில் அமைந்துள்ள பாண்டியர் காலக் கோயிலான மாசிலாநாதர் ஆலயம், பாண்டியர் காலக் கல்வெட்டுக்களில் "மணிவண்ணீச்சுரம்" என்றே அழைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மாசிலாநாதர் ஆலயத்தைப் போன்றே சிறிய வடிவிலமைந்த (Miniature) பிற்காலக் கோயில் இதுவெனத் தோன்றுகிறது. இச்சின்னக் கோயிலுள்ள சிற்பங்கள் மிகச் சிறியவையாக அமைந்திருப்பதும் நம் கருத்துக்கு உறுதியளிக்கின்றன.

இச்சின்னக் கோயிலின் முன்மண்டபத்தில், கோஷ்டம் போன்று அமைக்கப்பட்டுள்ள, உள்நோக்கியமைந்த பிறையொன்றில் கும்பிட்டு நிற்கும் அடியார் உருவம் உள்ளது. நாயக்கர் பாணியைச் சேர்ந்த இச்சிற்பத்தினைப் பற்றிச் சுற்று வட்டாரத்து மக்களுக்கு ஏதும் தெரியவில்லை. கோயிலின் வழி பாட்டினைக் கவனித்து வரும் திரு. பிச்சை குருக்களின் தந்தையான திரு. வேம்பு குருக்கள், இச்சிற்பம் காலிங்கராயபிள்ளை என்பவரைச் சித்திரிக்கிறது என்றும், சின்னக் கோயிலைக் கட்டியவர் அவர்தாம் என்றும், கோயிலுக்கு எதிரிலிருந்து, கடலரிப்பால் அழிந்துபோன சலங்குகாரத் தெருவைச் சேர்ந்தவர் அவர் என்றும் தாம் கேட்டிருந்த பழைய செவி வழிச் செய்திகளைக் குறிப்பிட்டார்.

சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தினரால் பதிப்பிக்கப்பட்ட **கப்பல் சாத்திரம்** என்ற நூலில், கி.பி. 1620-ல் தரங்கம்பாடியில் தினமாரக்கா

துபாசியாக இருந்த காலிங்கராய பிள்ளையின் வம்சத்தாரிடமிருந்து அந் நூலின் மூலப்பிரதி கிடைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே காலிங்க ராய பிள்ளை என்பவர் டென்மார்க் நாட்டினர் தரங்கம்பாடியில் குடியேறிய போது துபாஷாக இருந்தார் என்பதும், கப்பல் கட்டுதல், செலுத்துதல் முதலியவற்றின் நுட்பங்கள் அறிந்தவர் என்பதும் இதனால் தெளிவாகின்றன.

காலிங்கராயபிள்ளையின் வம்சத்தினர் பற்றிய தடயங்கள் எளிதில் கிடைக்கவில்லை. இவர், சின்னக் கோயிலுக்கு எதிரிலிருந்த சலங்குக்காரத் தெருவில் வாழ்ந்தவர் எனக் குறிப்பிடப்படுவதால், அத்தெருவில் குடியிருந் தவர்கள் கடலரிப்பால் நேர்ந்த அழிவுக்குப் பின் எங்குக் குடியேறினார்கள் என்று பலரிடம் விசாரித்த போது டேனிஷ் கோட்டையின் பின்புறம், கடலில் மணிவலை வீசி மீன்பிடிக்கும் சிலர் வாழ்கின்றனர்; அப்பகுதியும் சலங்குக்காரத் தெரு என்றே அழைக்கப்படுகிறது, அவர்களிடம் செய்தி கிடைக்கலாம் எனத் தெரிந்தது. அம்மக்களிடம் விசாரித்தபோது, அவர்கள் தாங்கள் படையாச்சி இனத்தவர் என்றும், சலங்குகாரத் தெருவில் முன்னர் வாழ்ந்தவர்கள் கரை துறை வேளாளர் அல்லது கரையார் எனப்படும் இனத்தவர் என்றும் காரைக் காலுக்கு அருகிலுள்ள கருக்கிளாச்சேரியில் அவ்வினத்தவர் நிரம்ப வாழ் கிறார்கள் என்றும் குறிப்பிட்டனர்.

கருக்கிளாச்சேரியில் வாழும் கரையார் இனத்தவரிடம் மேற்கொண்டு விசாரித்ததில், அவர்கள் படகுகளில் பொருள்களைக் கொண்டு சென்று கப்பல் களில் ஏற்றியிறக்கும் தொழில் செய்த இனத்தவர் என்றும், துறைமுகங்கள் அழிந்துபோன பின்னர் அவ்வப் பகுதியிலுள்ள ஆரிய நாட்டார் எனப்படும் மீனவர்களுடனும், மணிவலைப் படையாச்சி இனத்தவருடனும் ஒன்றி விட்டார்கள் என்றும் தெரிந்தது. கடலூர் போன்ற இடங்களில் மட்டும் துறைமுகங்களில் பணிபுரிகிறார்கள் என்றும், சிலர் சிங்கப்பூர் சென்று குடியேறி, பிரஜை உரிமை ஏற்றுக்கொண்டு துறைமுகப்பணி புரிந்து வருகின்றனர் என்றும் அறியமுடிந்தது. தரங்கம்பாடிக்கு அருகிலுள்ள சந்திரப்பாடியில் இவ்வினத் தவர் சிலர் வசிப்பதாகவும் குறிப்பிடப்பட்டது.

சந்திரப்பாடியில் உள்ள கரையார் இனத்தவருடன் தொடர்பு கொண்டு விசாரித்த போது பல செய்திகள் வெளியாயின. கலிங்கராயபிள்ளை என்பவர் அவர்கள் இனத் தலைவராக இருந்தவர் என்றும், டென்மார்க் நாட்டினரைத் தரங்கம்பாடியில் குடியேற்றியவர் அவர்தாம் என்றும், சலங்கு என்பது கட்டப் படும் பாய்மரப் படகு என்றும், அது 100 டன் முதல் 250 டன் வரையிலும் பொருள்களை ஏற்றிச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டது. திரு. மருளப் பிள்ளை என்ற முதியவர் அளித்த, இந்நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த ஓலைச்சுவடி ஒன்றில், கீழ்ச் சந்திரப்பாடியைச் சேர்ந்த காலிங்கராயன் பேட்டை என்ற ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. பூர்விகத்தில் அங்கு தான் கரை யார் இனத்தவர் வாழ்ந்தனர்; கடலரிப்பில் அவ்வூர் அழிந்துவிட்டதால், மேல் சந்திரப்பாடியில் குடி புகுந்தனர் என்ற விவரங்களும் விசாரிக்கையில் தெரிய வந்தன.

இவர்கள் தங்களைக் கரைதுறை வேளாளர் என அழைத்துக் கொள்வதாலும் பிள்ளை என்ற பட்டம் புனைந்து கொள்வதாலும் கரையார் எனக் குறிப்பிடும் மரபு மறைந்து வருகிறது, ஆனால் தரங்கம்பாடியிலுள்ள மாசிலாநாதர் கோயிற் கல்வெட்டு ஒன்று (S. I. I. Vol. IV No. 399) தரங்கம்பாடியில் வாழ்ந்த பதினெண் விஷயத்தாரையும் (வியாபாரிகள்) கரையாரையும் முதன்மையாகக் குறிப்பிடுகிறது. எனவே, கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் தரங்கம்பாடி துறைமுகப்பட்டினமாக இருந்தபோது இங்குக் கரையார் சிறப்பாக வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. பாண்டியர் காலத்துக்குப் பின்னர் தரங்கம்பாடி துறைமுகத்தின் சிறப்பு குறைந்திருக்க வேண்டும். தஞ்சை மன்னர் ரகுநாத நாயக்கரால் டேனிஷ் அரசருக்கு அனுப்பப்பட்டதும், தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநரால் அண்மையில் படித்தளிக்கப்பட்டுள்ளதுமான பொன்னோலை ஒன்று டென்மார்க் ராயல் ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அப்பொன்னோலையில் தரங்கம்பாடியில் ஒரு கரை துறை அமைக்கக் கட்டளையிட்டதாக ரகுநாத நாயக்கர் குறிக்கிறார். எனவே டென்மார்க் நாட்டினர் வரவையொட்டித் தரங்கம்பாடித் துறைமுகம் மீண்டும் சீருற்ற போது கரை துறை வேளாளர் இனத்தவரும் சிறப்பிடம் பெற்றனர். பழைய மணிவண்ணீச்சுரம் போலத் தமக்கென ஓர் ஆலயமும் நிர்மாணித்துக் கொண்டனர் எனக் கருதலாம்.

—o—

17082

# தமிழ்நாடு அரசு
# தொல்பொருள் ஆய்வுத்துறை

## அண்மைக்கால வெளியீடுகள்

| வரிசை எண் | புத்தகத்தின் பெயர் | ஆசிரியர் | வெளியிட்ட ஆண்டு | விலை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | முத்தானந்தர் ஞானக்குறவஞ்சி ... | மு. அருணாசலம் ... | 1981 | 4–50 |
| 2 | காதல் கொத்து ... | புலவர் மா. இராசேந்திரன் ... | 1981 | 7–50 |
| 3 | திருப்பரங்குன்றம் ... | செ. போசு ... | 1981 | 8–50 |
| 4 | களப்பிரர் ... | நடன. காசிநாதன் ... | 1981 | 3–75 |
| 5 | குடுமியான்மலை ... | சொ. சாந்தலிங்கம் ... | 1981 | 8–50 |
| 6 | கொடுமணல் இலக்கியங்கள் ... | புலவர் செ. இராசு ... | 1981 | 7–75 |
| 7 | வானரவீர மதுரைப் புராணம் ... | அரங்க. சீனிவாசன் ... | 1981 | 10–50 |
| 8 | திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது ... | மு. சண்முகம் பிள்ளை ... | 1981 | 4–50 |
| 9 | சங்கரமூர்த்திக் கோவை ... | புலவர் கு. சுந்தரமூர்த்தி ... | 1981 | 6–00 |
| 10 | திருக்கீழ்வேளூர் உலா ... | அ. இராசேந்திரன் ... | 1981 | 4–50 |
| 11 | பாளையப்பட்டுக்களின் வம்சாவளி முதல் தொகுதி ... | க. குழந்தைவேலன் ... | 1981 | 6–75 |
| 12 | ,, ,, 2ஆம் தொகுதி ... | நா. மார்க்சியகாந்தி ... | 1981 | 9–75 |
| 13 | ,, ,, 3ஆம் தொகுதி ... | ,, ... | 1981 | 3–00 |
| 14 | சுசிலவள்ளல் அம்மானை ... | எஸ். சௌந்தரபாண்டியன் ... | 1981 | 8–25 |
| 15 | திருப்பத்தூர் ... | திருமதி வள்ளிசொக்கலிங்கம் ... | 1981 | 5–25 |

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக டி துறையின் அச்சகத்தில், இத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி, எம்.ஏ., பிஎச்.டி., அவர்களுக்காகத் துணை இயக்குநர் நடன. காசிநாதன், எம்.ஏ., அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.